DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

BIG
Great Coverage.
BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் எத்திக்கும் கதிர் வீசும் உலகில் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1462 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 12, 2024



## ஒன்றாரியோ மாகாண பாராளுமன்றத்திற்கு பத்திரிகையாளரை அழைத்து அவரது வருகையை சபை அங்கத்தவர்களுக்கு அறிமுகம் செய்த மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி

*(உதயன் சிறப்புச் செய்தியாளர் சத்தியன்)*

நேற்று 11-04-2024 வியாழக்கிழமை எமது கனடா உதயன் குழுவினரை எம்மை "குயின்ஸ் பார்க்" என்று அழைக்கப்பெறும் ஒன்றாரியோ மாகாணத்தின் பாராளுமன்றத்திற்கு உத்தியோகபூர்வமாக அழைத்த மார்க்கம் தோர்ணிஹில் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள். சபையில் விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் விசேட அனுமதியை சபாநாயகரிடம் பெற்று எமது வருகை பற்றிய சபை அங்கத்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

## எமது வர்த்தக சம்மேளனத்தின் இயக்குனர் சபைக்கு ஆர்வமுள்ள தகுதியானவர்கள் இணைந்து கொள்வதனாலேயே தொடர்ச்சியாக அது வளர்ச்சிப் படிகளில் ஏறிக்கொண்டிருக்கின்றது

### "உதயனு"க்கு வழங்கிய நேர்காணலில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் முரளி சிவகுரு

(மார்க்கம் நகரலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

"எமது கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் இயக்குனர் சபைகளுக்கான தெரிவு ஒவ்வொரு இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறுகின்றது. இந்த தேர்தலின் மூலம் ஆர்வத்தோடு பணியாற்றக்கூடிய தகுதியானவர்கள் தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதனாலேயே தொடர்ச்சியாக எமது சம்மேளனம் வளர்ச்சிப் படிகளில் ஏறிக்கொண்டிருக்கின்றது.



இவ்வாறு கடந்த 10-04-2024 புதன்கிழமை கனடா உதயனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் முரளி சிவகுரு அவர்கள் உற்சாகத்துடன் தெரிவித்தார். மார்க்கம் நகரில் உள்ள சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தில் இந்த நேர்காணல் இடம்பெற்றது

(உள்ளே விபரமான செய்தி 17ம் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

எங்கள் வாசக அன்பர்கள், விளம்பரதாரர்கள், மற்றும் அனைவருக்கும் எமது இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

Krishna Punniyam
MORTGAGE AGENT
Mobile: 416.710.9150
ALL IN 1 ACCOUNTING
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service

Uthayan International Awards Festival – 2024
உதயன் சர்வதேச விருது விழா-2024
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
மண்டபம்:- The Estate Banquet & Event Centre, 430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM

HSB CANADA

# SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

## TAMIL NEW YEAR SPECIAL BUFFET

**Enjoy unlimited Buffet, Dosa, Poori & Vada.**

**DATE: 14TH APRIL 2024**

**TIMING: 10.00 AM TO 04.00 PM**

## SPECIAL MENU

Plain Dosa | Poori | Tiffin Sambhar | Potato Masala | Coconut Chutney | Special Chutney | Medhu Vada | Ghee Pongal | Rava Kichadi | Chef Special Biryani | Tandoori Curry | Bisibelabath | Bagalabath (Curd Rice) | Mixed Vegetable Sambhar | Vegetable Kootu | Special Kulambu | Rasam | Special Rice/Noodles | Plain Rice | Vegetable Poriyal | Special Poriyal | Appalam | Curd | Pickle More milagai Pachadi | Onion Pakora




# இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தர்மத்தின் எல்லை தாண்டி உதவிக்கரம் நீட்டும் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் மகத்தான பணிகள்

'பாத்திரம் அறிந்து பிச்சை போடு' என்ற கூற்று எம்மவர்கள் மத்தியில் எத்தனையோ ஆண்டுகளாய் பகிரப்படும் ஒன்றாக இருந்தும் உண்மையில் உணர்வோடு உதவி-களைச் செய்பவர்கள் 'அளந்தோ' அன்றி 'அறிந்தோ' உதவிகள் வழங்கமாட்டார்கள். அதுவும் உதவிக்கரம் நீட்டுபவர்கள் சிலர் மதங்களின் அடிப்படையில் உதவிகளை வழங்குவார்கள் அல்லது தெரிந்தவர்களுக்கு மட்டுமே உதவிகளைச் செய்வார்கள்.
ஆனால் எமது ஆசிரிய பீடத்திற்கு வந்து சேரும் சாதாரண செய்திகளுக்கு மத்தியில் 'சாதாரணமானது' என்று நாம் புறக்கணித்து விடமுடியாத ஒரு செய்தி ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து. நாம் இவ்வார ஆசிரிய தலையங்கமான 'கதிரோட்டத்தை' வடிக்கின்றோம்.

'மன்னார் மெசிடோ நிறுவனம்' என்ற உதவிகள் வழங்கும் அமைப்பு தொடர்பான செய்திகளை எமது மன்னார் செய்தியாளர் லம்பேர்ட் அவர்கள் தவறாது அனுப்பி வைப்பார். அந்த நிறுவனத்தின் உதவிக் கரம் நீட்டும் திட்டங்கள் மன்னார் பிரதேசத்தில் 'அடிக்கடி' இடம்பெறும் என்பதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் அறிந்து அவ்வாறான செய்திகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதுண்டு. இந்த அமைப்பு யாழ்ப்பாண நகரத்திலும் பலருக்கு தனது உதவிக்கரத்தை நீட்டியிருந்த வைபவங்கள் பல இதற்கு முன்னர் இடம்பெற்றிருந்தன.
ஆனால் இவ்வாரக் கதிரோட்டத்தில் இடம்பெறும் அளவிற்கு அந்த அமைப்பினர் செய்த உதவிகள் வழங்கும் நிகழ்வானது 'தர்மத்தின் எல்லைகளைக் கடந்து சென்றுள்ளது என்ற உயரிய கௌரவத்தை அந்த 'மன்னார் மெசிடோ நிறுவன'த்தின் நிர்வாகிகளுக்கு ஈட்டிக்கொடுத்துள்ளது என்றால் அது மிகையாகாது.
நாம் ஏற்கெனவே அறிந்த விடயம் ஒன்றே மன்னார் மெசிடோ நிறுவனத்தை மிகவும் அவசியமானவர்களுக்கு தமது உதவிக்கரத்தை நீட்டுவதற்கு தூண்டியுள்ளது. மியன்மார் எனப்படும் முன்னைய 'பர்மா' தேசத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான தாக்குதல்களை அந்த நாட்டின் பெரும்பான்மை ஆளும் இனத்தினர் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அரசின் ஆதரவோடு (நாம் பிறந்த இலங்கையில் நடைபெற்றது போன்ற ஒன்றே இது எனலாம்)' இந்த தாக்குதல்கள் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து பல நாடுகளுக்கும் தப்பி ஓடுவதற்கு அங்கு வாழ்ந்து வந்த இஸ்லாமியர்கள் முயன்றார்கள். இந்தியா போன்ற நாடுகள் அவர்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கவில்லை.

இனம் சார்ந்த தாக்குதல்கள் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து பங்களாதேஸ் நாட்டில் தற்காலிகமாக வாழ்ந்த நிலையில் அங்கிருந்து வெ-ளியேறி தமது உயிரை பாதுகாத்துக் கொள்ள கடல் வழியாக பயணித்த போது கடல் மார்க்கமாக பயணித்த மியன்மார் முஸ்லிம் அகதிகள் 105 பேர் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையில் அகதிகளாக தஞ்சமடைந்தனர். ஆனால் அவ்வாறு வந்த ஒரு குழுவினரை பௌத்தர்கள் சென்று தாக்க முயன்றதை நாம் செய்திகள் வாயிலாக அறிந்தோம்.
யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதியை வந்தடைந்த நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய குறித்த மியன்மார் அகதிகள் கொழும்பு பாணந்துறையில் தங்க வைக்கப்பட்டனர்.

இவ்வாறாக அவர்கள் அகதிகளாக இலங்கைக்கு வந்து பாணந்துறையில் தங்கியுள்ள மியன்மார் முஸ்லிம் மக்களுக்கு அவசரமாக காணப்பட்டு வீட்டிற்கான நிவாரணத்தை மன்னார் மெசிடோ நிறுவனம் நேற்றைய தினம் 28ம் திகதி வியாழக்கிழமை நேரடியாக சென்று வழங்கி வைத்துள்ளனர்.
இவ்வாறு 'மன்னார் மெசிடோ நிறுவனம்' வழங்கிய பண உதவிகள் அந்த மியன்மார் அகதிகளுக்கு அவர்கள் தங்கியுள்ள வீட்டு வாடகைக் கட்டணங்களை செலுத்த உதவியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.
மன்னாரில் இயங்கிவரும் இந்த மெசிடோ நிறுவனம் இந்த உதவி வழங்கும் திட்டத்தின் வாயிலாக 'தர்மத்தின் எல்லைகளைத் தாண்டி புரிந்த மாபெரும் உதவி என்றே நாம் கருதுகின்றோம். அதற்காகவே பாராட்டுகின்றோம்.

## ஒன்றாரியோ மாகாண பாராளுமன்றத்திற்கு பத்திரிகையாளரை அழைத்து அவரது வருகையை சபை அங்கத்தவர்களுக்கு அறிமுகம் செய்த மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி

(முன் பக்கத் தொடர்ச்சி)
அப்போது என்னுடன் 'ரூபம்' வானொலியின் நிறுவனரும் 'தேசம்' மாத இதழின் விநியோக மற்றும் விளம்பர முகாமையாளருமான ராம்சங்கர் சிவநாதன் அவர்களும் இருவரும் அங்கு அழைக்கப்பட்டிருந்தோம். பாராளுமன்ற அமர்வுகளின் பின்னர் ஒன்றாரியோ மாகாணத்தின் குடியுரிமை மற்றும் குடிவரவு அமைச்சர் அவர்களுக்கு எம்மை அறிமுகம் செய்து வைத்து அவரிடமிருந்து எமக்கு பாராட்டுக்களையும் பெற்றுத் தந்தார். இந்த சந்திப்பின் போது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரும் மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் அவர்களும் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் அவர்களும் கூட இருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.
மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் எமது உதயன் பத்திரிகையைப் பாராட்டும் வகையில் என்னிடத்தில் அரசு சார்பான பாராட்டுப் பத்திரத்தையும் வழங்கினார் என்பதும் கவனிக்கத்தக்கது.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation
உடற்பருமன் குறைத்தல் | Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



House for SALE in Colombo
கொழும்பில் வீடு விற்பனைக்கு உண்டு
14 Arethusa lane, Colombo 06, Sri Lanka இல் அமைந்துள்ள
Sq 1205 வீடு with 3 bedrooms & 2 baths
உடனடியாக விற்பனைக்கு உண்டு.
Walking distance to Galle Road, Supermarkets, Delmon Hospital and Banks.
Price: CAN $170,000
Contact: Bhuvana
(613) 983-0077
(deeds available)

மிசிசாகா நகரில் வீட்டைச் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு மணித்தியாலத்திற்கு $25 சம்பளமாகப் பெறலாம்
மிசிசாகாவில் நகரில் (QEW க்கு தெற்கே), வாரத்தில் இரண்டு முதல் மூன்று நாட்கள் வரை, தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு இலங்கை சமையல் மற்றும் சுத்தம் செய்வதில் அனுபவமுள்ள ஒரு பெண் தேவைப்படுகின்றார். ஒரு நாளைக்கு 4 மணிநேரம் வேலை செய்யலாம்
மேலதிக விபரங்களுக்கு நிர்மலா
(647) 391-4207

House For Rent
McLevin / Tapscott
சந்திப்பிற்கருகாமையில்
3 Bedroom + Den கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
2 வாகனங்கள் தரிக்கலாம். வர்த்தக நிலையங்கள், Bus வசதி, Nofrills ஆகியன மிக அருகில்.
Malvern Mall அருகில் உள்ளது.
விபரங்களுக்கு:
416-912-1572 416-299-4904




# வட மாகாண கல்வி அதிகாரிகள் இரத்மலானையில் உள்ள அரச சுற்றுலா விடுதி பொது மலசல கூடத்தில் வாந்தி

இலங்கை செய்திகள்
Sri Lanka News

இரத்மலானையில் உள்ள அரச சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் சிலர் மது அருந்திய நிலையில் பொது மலசல கூடத்தில் வாந்தி எடுத்தமை தகவல் அறியும் சட்டமூலத்தின் மூலம் அம்பலமாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வெளியில் பல தகவல்கள் மறைக்கப்பட்ட நிலையில் முறைப்பாட்டாளர் வட மாகாண பிரதம செயலாளர் செயலகத்துக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டமூலம் கேள்விகளை வழங்கியிருந்தார்.

குறித்த கேள்வியில் சம்பந்தப்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என கேள்வி தொடுக்கப்பட்ட நிலையில் பிரதம செயலாளர் செயலகம் பின் வருமாறு தகவலை வெளியிட்டுள்ளது.

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் வட மாகாண கல்வி பணிப்பாளர் வட மாகாண பிரதமர் செயலாளர் அலுவலகத்திற்கு குறித்த விடயம் தொடர்பான அறிக்கை இதுவரை வழங்கவில்லை.

இரத்மலானை அரச விடுதியில் வட மாகாண கல்வி பணிப்பாளர்கள் சிலர் மற்றும் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளப்பட்ட விரும்பத்தகாத செயல் தொடர்பில் விடுதி பொறுப்பாளரினால் முறையிடப்பட்ட நிலையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் வட மாகாண பிரதம செயலாளர் செயலகத்துக்கு வழங்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டமூலத்திற்கு பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது.

குறித்த முறைப்பாட்டில் மது அருந்தியவர்கள் தங்கியிருந்த ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியமை தொடர்பிலும் விதிதி பொறுப்பாளர்களால் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல் அறியும் சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை அரச சுற்றுவிடுதியில் முறைகேடாக நடந்து கொண்ட அதிகாரிகள் தொடர்பில் தொடர்புடைய அதிகாரிகளை உடன் இனம் கண்டு நடவடிக்கை மேற்கொள்வதுடன் அவர்கள் தொடர்பான விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு எமது NP/02/02/Cir App/2023ம் இலக்க 2023.01.10 கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் கடித இலக்கம் NP/03/02/GA/1/I nquiryம் இலக்க 2023 திகதிய கடிதம் மூலம் இணைப்பு - 02 மூலம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் குறித்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அறியத் தரமாறு கூறப்பட்ட நிலையிலும் உரிய நடவடிக்கைய எடுக்கப்படவில்லை என தகவல் அறியும் சட்டமூலத்தின் மூலம் வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரு கோரிக்கைகளுக்கும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வி பணிப்பாளர் உரிய நடவடிக்கை எடுத்து அறிக்கை இடும் வரை இரத்மலாணை அரச விடுதியில் தங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என NP/02/02/Cir. App/2023 23.01 .10 திகதிய கடிதம் மூலம் வட மாகாண பிரதம செயலாளர் நிர்வாகத்தினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் அறியும் சட்டமூலத்திற்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் வடமாகாண பிரதம செயலாளர் செயலகம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் முன்னுதாரணமாக செயல்பட வேண்டியவர்கள் முரணாக நடந்து கொண்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் உரிய முறையில் அறிக்கை இடும் வரை வட மாகாணத்தில் உள்ள அனைத்து வலய கல்விப் பணிப்பாளர்களும் சுற்றுலா விடுதியில் தாங்குவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்வாறான நிலையில் முறைப்பாட்டாளருக்கு 2024.04.02 பதில் வழங்கிய பிரதம செயலாளர் செயலகம் வடமாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் இதுவரை சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பில் பிரதமர் செயலாளர் செயலகத்திற்கு அறிக்கை தராததால் சுற்றுலா விடுதியில் தங்குவதற்கான தடை தொடர்ந்தும் நீடிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மாற்றமடைந்து போதிலும் வடமாகாண கல்வி பணிப்பாளராக ஜோன் குயின்ரஸ் தொடர்ந்தும் அதே பதவியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்திக்க வெளிதரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு







முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவை மற்றும் புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவை லண்டன் கிளை இணைந்து ஏற்பாடு செய்த புதுவை பண்பாட்டு பெருவிழா 06-04-2024) நடைபெற்றது. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள் கலந்துச் சிறப்பித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிர்வாக ரீதியாகவும், மக்களின் தேவைகள் தொடர்பாகவும் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்ற நிலையில் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு காணப்படுவதாக நிகழ்வில் பிரதம விருந்தினருக்கான உரையை ஆற்றிய போது ஆளுநர் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தும், சமூக பொது அமைப்புகள் ஊடாகவும் கிடைக்கும் கோரிக்கைகள் தொடர்பில் மிக சாதகமான முறையில் பரிசீலித்து வருவதாகவும் ஆளுநர் கூறினார்.

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றங்களை கோட்டக்கல்வி பணிப்பாளர்களும், வலயக்கல்விப் பணிப்பாளர்களும் மேற்கொண்டு வருவதால், பல பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்படாமல் காணப்படுவதும் பாரிய ஒரு சிக்கல் நிலையாகவே காணப்படுகின்றது.

ஆகவே இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறும், உரிய தரவுகளை சேகரிக்குமாறும், பொருத்தமான நடைமுறைகளை பின்பற்றி ஆசிரியர்களை நியமித்து வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக கௌரவ ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை நிறைவு பெற்றிருக்கின்ற நிலையில் பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட உள்ளது.

இதேவேளை, யுத்த காலத்தில் நாட்டிலிருந்து வெளியேறி தற்போது புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் உறவுகள், தாய் மண்ணுக்கு வருகை தந்து அவர்களுடைய நேரத்தையும், பணத்தையும் செலவு செய்து மக்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்வது மகிழ்ச்சியளிப்பதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவைகளை நிவர்த்திப்பதற்கு அரச சேவைகள் மாத்திரம் போதுமானதாக இல்லை எனவும், அந்தந்த சமூகத்தில் வாழும் மக்களும், புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவுகளும் மென்மேலும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் போது, தற்போது காணப்படும் நிலையிலிருந்து மேலும் முன்னேற்றத்தை அடையக்கூடிய சாத்தியம் உள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

# யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலை மாணவர்களுக்கு காசநோய் – எப்படி பரவியது?

யாழப்பாணத்தில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலருக்கு காசநோய் கண்டறியப்பட்ட நிலையில் துறை சார்ந்த வைத்தியர்களால் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவது, குறித்த ஆண்கள் பாடசாலையில் ஒரு வகுப்பில் கல்விபயிலும் மாணவனுக்கு உடல் மெலிவு ஏற்பட்ட நிலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இவ்வாறு உட்படுத்தப்பட்ட மாணவனுக்கு காச நோய் அறிகுறி இருப்பது கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் நெருங்கிப் பழகிய மாணவர்கள் சிலரை பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் அவர்களுக்கும் காசநோய் இருப்பது தெரியவந்தது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு துறை சார்ந்த வைத்திய நிபுணர்களால் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதுடன் தொடர்ந்தும் அவர்கள் கண்காணிக்கப்பட்டு வருவதாக வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த நோய் பாடசாலையில் எவ்வாறு பரவியது என நாம் வினவியபோது எவ்வாறு பரவியது என தங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை என தெரிவித்தார்.

குறித்த நோய் ஏனைய மாணவர்களுக்கு பரவாமல் இருப்பதற்கு எவ்வாறான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது என வினவிய போது அவர்களுக்கு 14 நாட்கள் வீட்டில் வைத்து சிகிச்சை வழங்கப்படுவதாகவும் பின்னர் முக கவசங்களை அணிந்து தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

குறித்த மாணவர்களுக்கு காச நோயின் ஆரம்ப நிலை காணப்படுவதுடன் உரிய முறையில் சிகிச்சை பெற்றால் ஏனையவர்களுக்கு பரவமல் தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் பொறுப்பு வாய்ந்த கல்வி உயர் அதிகாரியை தொடர்பு கொண்ட போது குறித்த பாடசாலையில் குறித்த நோய் இனம் காணப்பட்டமையை உறுதி செய்தார்.




# சாவகச்சேரியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மன்னாரில் மீட்பு

சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் சாவகச்சேரி பொலிஸாரின் துரித முயற்சியால் மன்னாரில் வைத்து மீட்கப்பட்டது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெறச்சென்ற ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை அங்கு நிறுத்தி விட்டுச் சென்றுள்ளார். பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

இதையடுத்து அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

விரைந்து செயற்பட்ட சாவகச்சேரி பொலிஸார் பொலிஸ் நிலையங்களுக்கும் சோதனைச் சாவடி களுக்கு தகவல் வழங்கினர்.

இதையடுத்து மன்னார் சோதனை சாவடியில் வைத்து மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டதுடன், மோட்டார் சைக்கிளைத் திருடியவரும் கைது செய்யப்பட்டார்.

# இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் இன, மத ரீதியான பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



கொழும்பு பௌத்த வாலிபர் சங்கத்தினர் (Colombo Young Men's Buddhist Association) 05-04-2024 வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

அன்று பிற்பகல் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் இன, மத ரீதியான பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ. ஜெயசேகரம், கொழும்பு பௌத்த வாலிபர் சங்கத்தின் தலைவர் மகேந்திர ஜெயசேகர, யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் அடிகளார், சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா. நந்தகுமார், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரப்பிள்ளை, பேராசிரியர் பூபாலசுந்தரம் ஐங்கரன், மத குருமார்கள், யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர், சிவில் சமுகத்தினர் கலந்துகொண்டிருந்தனர்.



# "யாழ்ப்பாணத்தை வரைபடமாக்கல்" எனும் தொனிப்பொருளில் கண்காட்சி!

"யாழ்ப்பாணத்தை வரைபடமாக்கல்" எனும் தொனிப்பொருளில் கண்காட்சி ஒன்று யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த கண்காட்சி இடம்பெற்றது.

குறித்த கண்காட்சியில் யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற நல்லூர் ஆலயம், யாழ்ப்பாண கோட்டை, நெடுந்தீவு உள்ளிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரபல்யமான பல இடங்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த வேலைத்திட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக, திட்டமிடல் வரலாற்றுத்துறை மற்றும் தொல்பொருள்துறை மாணவர்கள் 14 பேரும், நெதர்லாந்து பல்கலைக்கழக மாணவர்கள் 15 பேரும் இணைந்துள்ளனர்.

இவ்வாறான வேலைத்திட்டங்கள் ஏற்கனவே இலங்கையில் இருக்கின்ற பல பகுதிகளில் இடம்பெற்றுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.



கண்காசசியினை இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் Bonnnie Horbaach, இந்திய துணைத் தூதராக தூணைத் தூதுவர் சாய் முரளி, யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் உள்ளிட்டவர்கள் வருகைதந்து பார்வையிட்டிருந்தனர்.



# கிளிநொச்சி கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு



கிளிநொச்சி கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக கிராம மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவிற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்குமான எல்லைப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் தமது விவசாயத்தை அழித்து வருவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறை வைத்து காலபோகம் சிறுபோகம் செய்து வரும் விவசாயிகளின் விவசாய நிலங்களில் சட்டவிரோதமாக மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கின்றனர்.

30 அடி ஆழத்தில் இருந்த ஆற்றுப்பகுதி தற்பொழுது 50 அடிக்கும் மேலாக மணல் அகழ்வால் பாதிப்படைந்துள்ளது. இதனால அருகில் உள்ள வயல் நிலங்கள் இடிந்து விழுவதாகவும் தமது விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பல தடைவைகள் புதுக்குடியிருப்பு பொலிசாரிடமும் தர்மபுர பொலிசாரிடமும் முறைப்பாடு செய்தும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும தமக்கான வாழ்வாதார நிலங்களை பாதுகாத்து தருமாறு கேட்டு நிற்கின்றனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# பிறப்புரிமையான சுதந்திரத்தை எவரும் எழுதித்தர வேண்டியதில்லை – யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு!

**சுதந்திரம் எங்களது பிறப்புரிமை. அதை இன்னொருவர் எமக்கு எழுதித் தரவேண்டிய அவசியமில்லை. அதை இன்னொருவர் பறிக்கவும் முடியாது என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "அரசறிவியலாளன் இதழ் 6" நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுதந்திரக் காற்றை நீங்களாகச் சுவாசிக்க முடியாது. முன்னெடுப்புகள் இல்லாமல் எதையும் சாதித்து விடமுடியாது. இந்தியா ஒரு பெரிய நாடு. எத்தனையோ மொழிகளையும், எல்லைகள் அனைத்திலும் பயங்கரமான பிரச்சினைகளைக் கொண்டதொரு நாடு. ஆனால் அங்கு எல்லாமிருக்கிறது.

தமிழ் மக்கள் தங்கள் பாதையை எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் கவனம் செலுத்தவேண்டும். அதற்காக புரட்சிதான் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லி விட்டு நான் வீட்டுக்குச் செல்லமுடியாது.

யூதர்கள் அல்லது பலஸ்தீனியர்கள் முன்னர் எங்கு கண்டாலும் தங்களின் அடுத்த சந்திப்பு ஜெருசலேமில் என்று கைதட்டுவார்கள். நாங்கள் எங்களின் அடுத்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் என்று கைதட்டுகின்றோமா? தற்போது தேசியம் கதைக்கிறவர்கள் ஆசியாவிலேயே பிஸியானவர்கள். வாழ்வதோ கொழும்பில். லண்டன் குடியுரிமையும் கொண்டுள்ள அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற சிறப்புரிமையையும் கொண்டுள்ளனர்.

பலஸ்தீனம் போன்று எமது மண் பறிபோகவில்லை. நாங்கள் தற்போது பலஸ்தீனியர்கள் போன்று அகதி முகாம்களில் இருக்கவில்லை. எங்கள் தாய்நிலத்தைப் பாது காப்பதற்கான போதிய அறிவு எம் மத்தியிலுள்ளது. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் புரிந்துணர்வுப் பண்பு ஒவ்வொருவருக்கும் தேவையானதொன்று. ஆக்கிரமிக்கும் இனத்தின் செயற்பாடுகளைத் தமிழ்மக்கள் புரிந்து கொண்டு தங்களைப் பாதுகாக்கவேண்டும் என்றார்.



# சிறப்பாக இடம் பெற்ற பருத்தித்துறை நகர சபையின் உள்ளூராட்சி வார வாசிப்பு மாத பரிசளிப்பு விழா!





பருத்தித்துறை நகர சபையின் உள்ளூராட்சி வார வாசிப்பு மாத பரிசளிப்பு விழா பருத்தித்துறை நகர சபை செயலாளர் தாரணி கஜரூபன் தலைமையில் காலை 9:30 மணியளவில் ஆரம்பமானது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வீதியிலிருந்து விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு அங்கு மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. மங்கல சுடர்களினை நிகழ்வில் பிரதம விருந்தினரும் பருத்தித்துறை பிரதேச செயலருமான சி.சத்தியசீலன், வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மோ.தெய்வேந்திரா, முன்னாள் நகர பிதாக்களான திரு. இருதயராசா, வே. நவரட்ணராசா, மற்றும் விருந்தினர்கள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழ் மொழி வாழ்த்து இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து வரவேற்பு நடனம், வரவேற்பு உரை, தலைமை உரை என்பன இடம் பெற்றதை தொடர்ந்து வடமராட்சியின் புகழ் பூத்த கராத்தே பட்டி 8 பெற்ற ஆசிரியரும், யோகாசன ஆசிரியருமான பெருமதிப்பிற்குரிய ரட்ணசோதி அவர்கள், மற்றும் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், ஒழுங்காக சபைக்கு வரி செலுத்துவோர்கள், பருத்தித்துறை நகர சபையால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு நிகழ்வின் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் வழங்கி கௌரவித்ததுடன் சிறப்பு உரைகளையும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை நகரசபை உத்தியோகத்தர்கள், நகரசபைக்கு சிறப்பாக வரி செலுத்துவோர்கள், முன்னாள் சபை உறுப்பினர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், சனசமூக நிலைய உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# யாழ்ப்பாணத்தின் பிரபல மிருதங்க வித்துவான் பிரபல மிருதங்க வித்துவான் இயற்கை எய்தினார்!

பு. கஜிந்தன்

பிரபல மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ சு. வரதராஜசர்மா 10-04-2024 தெல்லிப்பழையில் இறைவனடி சேர்ந்தார்.

தெல்லிப்பழையை பிறந்பிடமாகக் கொண்ட இவர், 1955ம் ஆண்டு மே மாதம் 02ம் திகதி பிறந்தார். இவர் மிருதங்க வித்துவானாக பல்வேறு கலை சார் பணிகளை முன்னெடுத்திருந்தார்.

குறிப்பாக யுத்த காலம் முதல் இன்று வரை அறநெறி சார் கல்வி வளர்ச்சியிலும் பங்காற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# வவுனியா – மன்னார் வீதியின் சில பகுதிகளில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திய இளைஞர்களின் முன்மாதிரியான செயல்!

அதிக வெப்பமான காலநிலை நிலவுவதால் விலங்குகளின் நீர்த் தேவையை பூர்த்திசெய்யும் பொருட்டு வவுனியா - மன்னார் வீதியின் சில பகுதிகளில் மண் சட்டி மற்றும் சிரட்டைகளைப் பயன்படுத்தி இளைஞர்களினால் தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தண்ணீர் தொட்டிகளை அமைத்து இந்த வெப்பகாலத்தில் பறவைகள், விலங்குகளுக்கு தாகம் தீர்க்கும் உன்னத கடமையில் குறித்த இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இளைஞர்களின் இந்த செயலை பலரும் பாராட்டி வருகின்றனர்.



# முல்லைத்தீவு கேப்பாப்பாப்பிலவு காணி உரிமையாளர்கள் – வடக்கு ஆளுநர் சந்திப்பு!



முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணி உரிமையாளர்கள் இன்று வட மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் இந்ல கலந்துரையாடல் கலந்துரையாடல் இடம்பெற்றது. இச்சந்திப்பில் காணி உரிமையாளர்கள் சிலர் (6 பேர்) கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த காணிகளை விடுவிக்க கோரி மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். அந்தவகையில் இன்றையதினம் இவ்வாறு ஆளுநரைச் சந்தித்தனர். தமது பிரச்சினைகள் குறித்து ஆராய்வதாக ஆளுநர் தெரிவித்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

# நுங்கு வெட்டுவதற்கு பனையில் ஏறிய கைதடி பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் கீழே விழுந்து உயிரிழப்பு

வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கு நுங்கு வெட்ட பனை மரத்தில் ஏறி தவறி வீழ்ந்ததில் மூன்று பிள்ளைகளின் இளம் தந்தை பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று கைதடி பகுதியில் இடம் இடம்பெற்றுள்ளது.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கு நுங்கு வெட்டிக்கொடுக்க பனை மரத்தில் ஏறிய போது தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் குறித்த நபர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் கைதடி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராசா கேதீஸ்வரன் வயது 41 என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உடல் கூற்று சோதனைக்கு பிறகு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "சுமந்திரனை அநுர அழைக்கவில்லை: அழையா விருந்தாளியாக அவர் வந்தார்"

## "சமஷ்டி பற்றியோ தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலோ பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் சம்பந்தன் மற்றும் சிறிதரனை விட நமது கட்சியின் தலைவர் அநுரவுக்கு நன்கு தெரியும்"

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவிப்பு

சுமந்திரனை அநுர அழைக்கவில்லை : அழையா விருந்தாளியாக வந்தார்

சமஷ்டியைப் பற்றியோ தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலோ தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் சம்பந்தன் மற்றும் சிறிதரனை விட நமது கட்சியின் தலைவர் அநுரவுக்கு நன்கு தெரியும்.

- சந்திரசேகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தி மாநாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான எம் ஏ சுமந்திரனுக்கு தனிப்பட்ட அழைப்பை எமது கட்சி விடுக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாநாட்டுக்கு தமிழ் கட்சிகளுக்கான அழைப்பினை வழங்கினோம் அல்லாமல் தனிப்பட்ட அழைப்பு விடுக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கு தனிப்பட்ட அழைப்பை எமது காட்சி வழங்கவில்லை தானாக மாநாட்டுக்கு வந்தார் வந்தவரை வரவேற்கும் பண்பின் அடிப்படையில் அவரை அழைத்தோம்.



ஆனால் வந்த சுமந்திரன் எமது கட்சியின் தலைவர் அனுரகுமாரா திசாநாயக்கவிடம் இந்தியாவைப் போல் சமஸ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் நமது கட்சியின் தலைவருக்கு கூறியதாக செய்திகள் வெளி வந்ததாக அறிந்தோம்.

சமஷ்டியைப் பற்றியோ தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலோ தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் சம்பந்தன் மற்றும் சிறிதரனை விட நமது கட்சியின் தலைவர் அநுரவுக்கு நன்கு தெரியும்.

ஆகவே நாம் தமிழ் கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம் ஆனால் தனி நபர்களை அழைத்து அரசியல் செய்யும் நோக்கம் தமது கட்சிக்கு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# தெல்லிப்பழை பொது நூலகத்தில் டிஜிற்றல் மையம், நூலக நுழைவு தோரண வாயில் திறப்பு!

தெல்லிப்பழை பொது நூலகமானது டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டு, நூலக நுழைவு வாயில் போன்றவற்றின் அங்குராற்பணம் 10-04-2024 அன்று இடம்பெற்றது.

காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வானது வலி வடக்கு பிரதேச செயளாளர் சு. சுதர்ஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்குப் பிரதம விலுந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயளாளர் செல்லத்துரை பிரணவநாதன் கலந்து சிறப்பித்தார்.







ஏற்கனவே செயற்பாட்டிலிருந்த நூலகத்திற்கு வலி வடக்கு பிரதேசபை நிதியில் முகப்பு வாயி தோரண வாயில் அமைக்கப்பட்டதுடன், ஆசிய மன்றத்தின் நிதி உதவியுடன் டியிற்றல் அறிவு மையமும் அமைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதேச சபை ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகெண்டனர்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# திருகோணமலை நகர் பகுதியில் 75 மில்லியன் ரூபா செலவில் 3கிலோ மீற்றர் கார்ப்பெட் வீதி அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது





திருகோணமலை நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 75 மில்லியன் ரூபா செலவில் 3கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஹாப்பெட் இடும் பணி இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கண்காணிப்பின் கீழ் இப் பாதை அபிவிருத்தி பணி இடம்பெற்றது.

திருகோணமலையில் இயங்கிவரும் பிரகாஷ் construction இதனை அமுல்படுத்தி வருகிறது இதில் மூர் வீதி, வித்தியாலயம் வீதி வித்தியாலயம் ஒழுங்கை ஔ கல்லூரி வீதி சாரதா வீதி, ஔவையார் வீதி உட்பட ஒவ்வொரு வீதியும் தலா ஒரு கிலோ மீற்றர் வரை மொத்தமாக 3 கிலோ மீற்றர் தூரம் வரை காபட் இடும் பணியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான வீதி அபிவிருத்தி பணிகள் கொரியா, சீனா போன்ற நாடுகளின் கம்பெனிகளாலே இலங்கையில் மேற் கொள்ளப்பட்டது. திருகோணமலையை சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்தினால் இந்த பாதையிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் குழுவின் கண்காணிப்பின் கீழ் திறம்பட செயற்படுத்தப்பட்டு வருகின்றனர்.

# பொன்னாவெளியில் குடியேற விரும்பிம்பினால் வீட்டுத்திட்டம் வழங்கத் தயார் — அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



பூநகரி பொன்னாவெளிப் பகுதியில் மக்கள் குடியேற விரும்பினால் மக்களுக்கான வீட்டுத்திட்டகளை வழங்கத் தயார் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

11-04-2024 அன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகததில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் பொன்னியில் மக்களுக்கான அபிவிருத்திகளை முன்னெடுக்கும் நோக்கில் சுண்ணக்கல் அகழ்வு ஆய்வுப் பணிக்காக இரண்டு துறை சார்ந்த அதிகாரிகளை அழைத்துச் சென்றேன் போதையில் நின்றவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தி செல்ல விடாமல் தடுத்தனர்.

நான் அங்கு சென்றது துறைசார்ந்த அதிகாரிகளிடம் மக்களுக்கு இருக்கும் சந்தேகங்களை தெளிவுபடுத்துவதற்காக சென்றிருந்தேன் சிலர் அதனை அரசியல் நோக்கத்திற்காக தடுத்து விட்டார்கள்.

பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மக்களுக்கு சாதகமானது என கருதினால் மட்டுமே அகழ்வு பணி மேற்கொள்ளப்படும்.

சிலர் ஒரு ஊடக சந்திப்பில் பொன்னா வெளியில் இருந்த மக்களை வீட்டு திட்டம் தர முடியாது வெளியிடங்களுக்கு வந்தால் மட்டுமே பெற முடியும் என கூறியதாக தெரிவித்தனர்.

நான் அவர்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறேன் பொன்னாவெளியில் மக்கள் வசிக்கப் போகிறார்கள் என்றால் அவர்களுக்கான வீட்டு திட்டத்தை வழங்க தயாராக இருக்கிறேன்.

மக்களின் வாழ்வாதாரம் நாட்டின் அபிவிருத்தி இந்த அபிவிருத்தியை அரசியல் நோக்கங்களுக்காக மதுபானங்களை வழங்கி தடுக்க முடியாது.

ஆகவே பொன்னாகலே சுன்னக்கல் அகழ்வுக்கான ஆய்வு பணி உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதோடு அப் பகுதியில் மக்கள் குடியேற விரும்பினால் அவர்களுக்கான வீட்டுத் திட்டத்தை வழங்க தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நீண்ட இழுபறியில் இருந்த இரணைமடு குளத்தின் கீழான சிறு போக செய்கைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது



வடமாகாணத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமாகிய இரணைமடு குளத்தின் கீழ், 2024ம் ஆண்டுக்கான சிறுபோக செய்கை சம்மந்தமான விசேட கலந்துரையாடல் 11-04-2024 அன்று கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்கதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காலை நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கரைச்சி பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட பிரதி ஆணையாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தின் கீழ் உள்ள 22 கமக்காரர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இரணைமடு குளத்தின் கீழான சிறுபோக செய்கை அளவை தீர்மானிக்கும் கலந்துரையாடல்கள் முடிவு எட்டப்படாது இழுபறி நிலையில் காணப்பட்டது.

கடந்த 8ம் திகதி திங்கட்கிழமை மாவட்ட பதில் அரசாங்கதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிகளுடனான கலந்துரையாடலையடுத்து சுழற்சி முறையில் 15560 ஏக்கர் செய்கை பண்ணுவதாக தீர்மானிக்கப்பட்டது.

குறித்த சுழற்சி முறை வேண்டாம் என தெரிவித்து விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் விசேட கலந்துரையாடலுக்கு திட்டமிடப்பட்டது.

இந்த நிலையில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. பல மணி நேர கலந்துரையாடலின் பின்பு சுழற்சி முறையை தவிர்த்து பங்கீட்டு முறையில் வழமை போன்று செய்கை மேற்கொள்வதாக தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

# வட இந்து ஆரம்ப பாடசாலை சமூகம் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு!




யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து ஆரம்ப பாடசாலை பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இணைந்து கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றினை 10-04-2024 அன்று காலை 9:45 மணியளவில் முன்னெடுத்தனர்.

முறையற்ற அல்லது சட்ட விரோதமாக பாடசாலையால் நிதி சேகரிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் அதன் உண்மை தன்மையை வெளிப்படுத்திவதற்க்காகவும், பாடசாலையின் நற் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முன்னாள் பழைய மாணவர் சங்க நிர்வாகிக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க கோரியும், அதே பாடசாலையின் பணியாற்றும் அவரது மனைவியான ஆசிரியைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரியுமே இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலையில் வாயிலில் இருந்து ஆரம்பமான குறித்த கவன ஈர்ப்பு போராட்டம் வடமராட்சி வலய கல்வி அலுவலகம் வரை சென்று வலய கல்வி பணிப்பாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டு போராட்டம் நிறைவடைந்தது.

குறித்த மகஜரை பெற்றுக்கொண்ட வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் தான் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்த நிலையில் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலைக்கு சென்ற மாணவர்கள் வகுப்புக்களை புறக்கணித்திரிந்த நிலையில் அங்கு விரைந்த வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் மாணவர்கள், ஆசிரியர்களுடன் பேசி தான் உரிய நடவடிக்கைகளை ஏடுப்பதாக உறுதியளித்திருந்த நிலையில் சில மணி நேரங்களின் பின் வகுப்புக்கள் சுமுகமாக இடம் பெற்றது.





# திருகோணமலை கல்வி வலயப் பிரிவு நாமகள் பாடசாலையில் சமூக ஆர்வலர் இராஜகோன் பிரதீபன் அவர்களினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன



திருகோணமலை கல்வி வலயப் பிரிவுக்குட்பட்ட தி/நாமகள் பாடசாலையின் தரம் 1க்கான மாணவர்களின் வருகையில் பல வருடங்களாக வீழ்ச்சி கண்டுள்ளமையால் சமூக ஆர்வலர் இராஜகோன் பிரதீபன் அவர்களினால் குறித்த பாடசாலைக்கு ஒவ்வொரு வருடமும் கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வந்தன.

அத்துடன் 2023ம் ஆண்டில் இருந்து முதலாம் ஆண்டு மாணவர்களை சேர்க்கும் நோக்கத்துடன் கல்விக்கான ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 100000.00 வழங்கப்பட்டு வருவதுடன் இவ் ஆண்டில் (2024) 07 மாணவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் மொத்தமாக ஏழு இலட்சம் வங்கி கணக்குகளில் பணம் ராஜகோபன் பிரதீபன் அவர்களினால் வைப்பிலிடப்பட்டது.

அத்துடன் வீ.செல்வராசா அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் 10-04-2024 அன்று திருக்கடலூர் நாமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.







# உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்தக் கோரி தேர்தல் ஆணைக்குழு முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய போராட்டம்

**- நடராசா லோகதயாளன்**

உள்ளூராட்சி சபை தேர்தல்கள் பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தனது வீட்டுக்கு முன்பாக போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் இன்றி அதிகார வர்க்க ஆட்சியின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களை நடத்துவது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

உள்ளூராட்சி மன்றங்களை அதிகாரிகளின் கீழ் வைத்திருப்பது அடிப்படை உரிமை மீறல்



என்று நீதிமன்றம் கூறியது. அவர்கள் இல்லாமல் இயங்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள்.

அப்படியானால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையில்லை. ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர், பிரதம நீதியரசர், பாதுகாப்புப் படைத் தலைவர் ஆகியோர் மக்கள் பிரதிநிதிகள் இன்றி ஆட்சியமைக்க முடியும் என மேலும் தெரிவித்தார்.

# திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் புத்தர் சிலை வைக்கப்பட்டது

**- நடராசா லோகதயாளன்**



திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுவந்த புத்தர்சிலை திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை சிவபுரி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மடத்தடி பகுதியில், வீரகத்தி பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான காணியில் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டுவந்த புத்தர்சிலை அவசர அவசரமாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அப்பகுதியில் வசிக்கும் சிறியளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இங்கே கடந்த 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் தமிழ் மக்களுடைய எதிர்ப்பையும் மீறி புத்தர்சிலை ஒன்று வைக்கப்பட்டது. இவ்விடத்திலேயே தற்போது பாரிய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு பெரிய அளவிளான புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளது.

இதுபோன்ற பௌத்த மயமாக்கலின் மூலம் தமிழர் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுடைய காணிகள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு சிங்களமயமாக்கப்பட்டு வருவதாகவும், சிறிய புத்தர் சிலை வைப்பதில் தொடங்கி அது விகாரையாக மாற்றப்பட்டு சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளும் வரையிலான செயற்பாட்டை அரச அனுசரணையுடன் சிலர் செய்து வருவதாகவும் இதற்கு அதனுடன் சம்பந்தப்பட்ட அரச நிர்வாகமும் துணை போவதோடு புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டு திறப்புவிழா இடம்பெறும் வரையில் வாய் மூடி மௌனிகளாக ஒளிந்திருக்கும் அரசியல்வாதிகள் இனி ஆர்ப்பாட்டம், மக்கள் போராட்டம் என ஏமாற்று அரசியலில் ஈடுபடுவர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் இந்தக் கட்டுமானம் தொடரபில் கனடா உதயனில் 2024-05-04 அன்று செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....**

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**


எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# ஜனாதிபதித் தேர்தல்: தமிழ் அரசியல் சமூகம் என்ன செய்யப் போகின்றது?

**யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழரசுக் கட்சியானது ஒருமித்த முடிவை எடுக்க முடியாத ஒரு நிலை தொடர்ந்து நிலவுகின்றது. கட்சிக்குள் காணப்படும் இரண்டு பிரிவுகளும் இரு வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும் தெரிகின்றது. சுமந்திரன் அணி பொது வேட்பாளர் என்ற தெரிவை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. சிறீதரன் பொது வேட்பாளர் தொடர்பான கருத்தரங்குகளில் ஆர்வமாகக் கலந்து கொள்கிறார். சிறீதரன் அணிக்கு நெருக்கமானவராகத் தோன்றும் சம்பந்தர், ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் என்று தெரிவை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த விடயத்தில் அவர் சுமந்திரன் அணியின் நிலைப்பாட்டோடு காணப்படுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு முக்கியமானது. ஏனென்றால் பொதுவாக தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமாகத்தான் முடிவெடுப்பதுண்டு. கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழரசுக் கட்சி ராஜபக்சக்களுக்கு எதிராகத்தான் முடிவெடுத்து வந்திருக்கின்றது.

ராஜபக்சக்களுக்கு எதிராக என்ற ஒரே காரணத்துக்காக, போர் முடிந்த அடுத்த ஆண்டு சரத் பொன்சேகாவை ஆதரித்த ஒரு கட்சி. அது ஒரு மோசமான முடிவு. தமிழ் மக்கள் யார் மீது போர் குற்றச்சாட்டுகளையும் இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளையும் சுமத்துகின்றார்களோ, அவருக்கு-போரை வழிநடத்திய ஒரு தளபதிக்கு - தமிழ் மக்களின் வாக்குகளை வாங்கிக் கொடுத்தமை என்பது, அதுவும் 2009க்கு அடுத்த ஆண்டு, அவ்வாறு சரத் பொன் சதாவை ஆதரித்தமை என்பது ஒரு மகா தவறு. இப்பொழுது தமிழ் மக்கள் உலக நீதிமன்றங்களுக்கு போக வேண்டும் என்றும் ஐநாவின் பொதுச்சபை, பாதுகாப்பு சபைக்கு விவகாரம் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றார்கள். அந்த உலகப் பொது நிறுவனங்கள் தமிழ் மக்களை நோக்கிப் பின்வரும் கேள்வியை கேட்க முடியும். நீங்கள் தானே ஆயுதப் போராட்டம் முடிந்த அடுத்த ஆண்டு அந்த தளபதியை அங்கீகரித்து, அவருக்கு வாக்களித்தீர்கள். இப்பொழுது அவரும் அவருக்கு கீழ் செயல்பட்ட தளபதிகளும் குற்றம் புரிந்திருக்கிறார்கள் என்று சொல்லி ஐநாவில் முறையீடு செய்கிறீர்களே? என்று கேட்டால் தமிழ் மக்கள் என்ன பதில் சொல்வது? தமிழ் மக்களை சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கேட்ட தமிழரசுக் கட்சி என்ன பதில் சொல்லும்?

இப்படிப்பட்டதோர் வரலாற்றுப் பின்னணியில், இம்முறை தமிழரசுக் கட்சி ராஜபக்சங்களுக்கு எதிராக முடிவெடுக்கும் நிலைமைகள் தான் அதிகமாகத் தெரிகின்றன. அப்படிப் பார்த்தால் அவர்கள் சஜித் பிரேமதாசாவுக்கு அல்லது ஜேவிபிக்கு வாக்களிக்க வேண்டும். கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஜேவிபியின் பொதுக்கூட்டத்தில் சுமந்திரன் முன் வரிசையில் காணப்பட்டார். அதே சமயம் ஜேவிபி தலைவர் தெரிவித்த கருத்துக்களுக்கு எதிராக சிறீதரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார். இது, தமிழரசுக் கட்சி அதன் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நிலைப்பாடுகளில் துலக்கமாகப் பிரிந்து நிற்பதைக் காட்டுகின்றதா.

அவ்வாறு கட்சி பிரிந்து இருப்பதும், குறிப்பாக கட்சியின் புதிய நிர்வாகம் செயற்பட முடியாது இருப்பதும், உடலாலும் மனதாலும் இயலாதவர் ஆகிவிட்ட மாவை சேனாதிராஜா தொடர்ந்தும் தலைவராக இருப்பதும், சிங்கள வேட்பாளர்களுக்கு ஒரு விதத்தில் அனுகூலமானது.

மாவை சேனாதிராஜாவின் தலைமைப் பொறுப்பின் கீழ் தான் கட்சி இப்படி ஒரு சீரழிவு நோக்கிச் செலுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக உண்டு. மாவையால் முடியாது என்பது கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் உள்ள ஒரு பொது அபிப்பிராயம். ஆனால் இந்த பொது அபிப்பிராயம், கடந்த 15 ஆண்டுகால அனுபவம் என்பவற்றை எல்லாம் மீறி அவர் தொடர்ந்தும் தலைவராகக் காணப்படுகிறார்.

நாடு இந்த ஆண்டு ஒரு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளும். அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் மூன்று தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. இப்படிப்பட்டதோர் காலகட்டத்தில், கட்சியானது வினைத்திறனோடு செயல்பட முடியாமல் இருக்கிறது. இது தென்னிலங்கைக்கு அனுகூலமானது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது வழமைபோல ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கின்றது. தேர்தலைப் புறக்கணிப்பது அல்லது யாருக்கும் வாக்களிக்காமல் விடுவது என்பது ஒரு ஜனநாயகத் தெரிவு. ஆனால் அது ஒரு கட்சியின் கொள்கை முடிவாக மட்டும் இருக்க முடியாது. ஏனென்றால் மக்களுக்கு வழி காட்டத்தான் கட்சி. மக்களைத் திரட்டத்தான் கட்சி. புறக்கணிக்கிறோம் என்று அறிவித்துவிட்டு, கட்சி சும்மா இருக்க முடியாது. மக்களைப் புறக்கணிக்குமாறு கருத்துருவாக்கம் செய்ய வேண்டும். ஏறக்குறைய அதுவும் ஒரு தேர்தல் பிரச்சாரம் தான். அதற்கும் ஒரு பட்ஜெட் இருக்கும். அவ்வாறு மக்கள் தேர்தலை புறக்கணிப்பார்களாக இருந்தால், அதுகூட ஆகப் பிந்திய ஒரு மக்கள் ஆணையாகக் காட்டப்படும். எனவே தனது முடிவை மக்கள் மயப்படுத்துவதில்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வெற்றியிருக்கிறது. முடிவை அறிவித்து விட்டு விலகி நிற்பது அல்லது வேட்பாளரை முன்னிறுத்த முயற்சிக்கும் தரப்புகளை அரசாங்கத்தின் ஆட்கள் என்று கூறுவது தேசத்தைத் திரட்டும் அரசியல் அல்ல. தன் முடிவை மக்கள் மயப்படுத்துவதில்தான் ஒரு கட்சியின் வெற்றி தங்கியிருக்கின்றது. அந்தக் கட்சியின் கருத்துக்கள் மக்கள் மயப்பட்டால்,மக்கள் தேர்தலில் அந்தக் கட்சியோடு நிற்பார்கள். ஜனநாயக ரீதியாக அந்தக் கட்சி அதிக ஆசனங்களை வெல்லும். மட்டுமல்ல, அது மக்களை ஒரு தேசமாகத் திரட்டும். எனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதன் முடிவை மக்கள் மயப்படுத்த வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும்.

அப்படி அவர்கள் உழைக்கவில்லையென்றால், மக்களை அவர்கள் பாட்டில் வாக்களிக்க விடுவதாக அது முடியும்.அது ஓர் அரசியல் தவறு. மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதனை நெறிப்படுத்துவதுதான் கட்சி அரசியல். மக்கள் இயக்கத்தின் அரசியலும் அதுதான். எனவே மக்களுக்கு வழி காட்ட வேண்டும். மக்களை நீங்களே முடிவெடுங்கள் என்று விட முடியாது. அது தமிழ் மக்களைக் கையாள முற்படும் வெளிச் சக்திகளின் வழிகளை இலகுவாக்கி விடும்.

எனவே தேர்தலைப் புறக்கணிப்பதும் ஒரு தெரிவு. ஆனால் அது மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். அதற்குரிய மக்கள் ஆணை பெறப்பட வேண்டும். இல்லை என்றால் என்ன நடக்கும்?

தமிழரசுக் கட்சியும் முடிவெடுக்காது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தன் முடிவை மக்கள் மயப்படுத்தாது.

பொது வேட்பாளரை முன்னிறுத்தப் போவதாக அறிவித்த ஈபிஆர்எல் எஃப் கட்சி அறிக்கைகள் விடுவதற்கு அப்பால் எதையும் செய்ததாகத் தெரியவில்லை. “மக்கள் மனு” என்ற சிவில் சமூகம் அது தொடர்பாக இரண்டு கருத்தரங்களை ஒழுங்கு படுத்தியது. அந்த அமைப்பு கொழும்பில் கட்சித் தலைவர்களைச் சந்தித்து வருகின்றது. இந்நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவானது இப்பொழுதும் கருத்துருவாக்கம் என்ற ஒரு கட்டத்தைத் தாண்டவில்லை. அதை ஒரு செயலாக மாற்ற ஒரு பெரும் செயலாக மாற்ற, அத்தெரிவை முன்வைக்கும் கட்சிகளும் அமைப்புகளும் மக்கள் மத்தியில் இறங்கி கருத்துருவாக்கத்தைச் செய்ய வேண்டும்.

ஆனால் அரங்கில் அப்படிப்பட்ட செயற்பாடுகளைப் பெரிய அளவில் காண முடியவில்லை. எனது கட்டுரைகளில் நான் திரும்பத் திரும்ப கூறுவது போல, தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவானது தமிழ்ப் பொதுக் கருத்து, அல்லது பொது முடிவு என்ற தெரிவுதான். தமிழ்ப் பொது முடிவு என்பது, நடைமுறையில் தமிழ் ஐக்கியம்தான். கடந்த 15 ஆண்டுகளாகத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளை ஐக்கியப்படுத்த முடியவில்லை. கடந்த 15 ஆண்டுகளாக அவ்வாறான ஐக்கியப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டது கட்சிகள் அல்லாத குடிமக்கள் அமைப்புகள் அல்லது சில தனி நபர்கள் அல்லது மாணவர் அமைப்புகள்தான். 2020க்கு பின்னர்தான் அதாவது தமிழரசுக் கட்சி அதன் ஏகபோகத்தை இழந்த பின்னர் தான் ஓரளவுக்கு ஐக்கிய முயற்சிகளுக்கு ஒத்துழைத்தது. ஆனால் நடைமுறையில் ஐக்கியம் எனப்படுவது அதன் முழுமையான பொருளில் இன்றுவரை சாத்தியமாகவில்லை.

ஆறு கட்சிகள் இணைந்து புதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு கட்சியை குத்துவிளக்கு சின்னத்தின் கீழ் உருவாக்கின. அவை அண்மையில் வவுனியாவில் கூடி ஒரு முடிவெடுத்தன. தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் ஏனைய கட்சிகளோடு உரையாடுவது என்பதே அந்த முடிவு. அவ்வாறு உரையாடி எல்லாக் கட்சிகளும் இணைந்து ஒரு பொது முடிவை எடுக்குமா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அண்மையில்,தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியது போன்ற சில விவகாரங்களில் மட்டும் தமிழ்க் கட்சிகள் ஐக்கிய பட்டிருக்கின்றன. மாறாக தேசத்தைத் திரட்டுவது என்ற அடிப்படையில் கட்சிகளை ஐக்கியப்படுத்த முடியவில்லை. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியப்பட்டு ஒரு பொது வேட்பாளரை நிறுத்தும் என்று எதிர்பார்க்கலாமா?

கடந்த 15 ஆண்டுகளாக நடக்காத ஓர் அதிசயம் இனி நடக்கக்கூடும் என்று எப்படி நம்புவது? எனவே கட்சிகளாக இணைந்து ஒரு முடிவை எடுத்தாள் அது ஒரு பெரிய அடைவு தான். அதுவும் தேர்தல் நோக்க நிலையில் இருந்து அல்லாமல், தேசத்தைத் திரட்டு வது என்ற அடிப்படையில் ஒன்றிணைய வேண்டும். அதாவது கடந்த 15 ஆண்டுகளாக நடக்காத அதிசயம் அல்லது அற்புதம் ஒன்று நிகழ வேண்டும். அப்படி எதுவும் நடந்தால்தான் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட பெரும்பாலான கட்சிகள் இணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தும்.

-----------------------------------------------



# ருவாண்டா (1994) ... இலங்கை (2009) ... காசா (2024) ...

## (இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனின் சிறப்புத் தொடர்)

(பகுதி - 1)

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



...ஏப்ரல் 7... இனப்படுகொலை தொடர்பில் மிகவும் முக்கியமானதொரு நாள் ... ஆம் ... ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி, ஆப்ரிக்க நாடான ருவாண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலையை நினைவுகூறும் ஒரு நாளாக ஐ நா அங்கீகரித்துள்ளது. இனப்படுகொலை மற்றும் இன அழிப்பு தொடர்பில் ருவாண்டாவில் இடம்பெற்றவை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பது வரலாற்று உண்மை.

அவ்வகையில் இந்த ஆண்டு ருவாண்டா இனப்படுகொலைகளின் 30 ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. ருவாண்டா இனப்படுகொலைகள் தொடர்பில் உலக நாடுகள் எப்படியான நிலைப்பாட்டை கொண்டிருந்தன, அப்போது நடைபெற்றது என்ன அதை இந்த 30 ஆண்டுகளுடன் பொருத்திப்பார்ப்பது காலத்தின் தேவை என கருதுகிறேன்...

1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி தொடங்கிய கட்டுக்கடங்காத வன்செயல்களும் இனவெறியாட்டமும் அடுத்த நூறு நாட்கள் நீடித்தன. உலகம் அதுவரை கண்டிறாத வகையில் படுகொலைகள் இடம்பெற்றன. அந்த மாதம் 6 ஆம் திகதி மாலை அப்போது ருவாண்டாவின் அதிபர் யுவெனெல் ஹப்யாரிமானா மற்றும் அவருடன் அண்டை நாடான புருண்டியின் அதிபர் சைப்ரியேன் ந்டாயமிரா பயணித்த விமானம், ருவாண்டா நாட்டின் தலைநகர் கிகாலியிலுள்ள விமான நிலையத்தில் தரையிரங்கவிருந்த நிலையில், தரையிலிருந்து விண்ணுக்குச் செலுத்தப்படும் ஏவுகணை ஒன்றால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த தாக்குதலில் உயிரிழந்த இருநாட்டு நடத்தியவர்கள் ஹூட்டு இனக்குழுவினர். அந்த ஏவுகணை தாக்குதலை நடத்தியவர்கள் டூட்ஸி இனத்தவரின் ருவாண்டாவின் தேசப்பற்று முன்னணி அல்லது அந்த இரு இனக்குழுவிற்கும் இடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையை எதிர்த்த ஹூட்டு பவர் என்ற அரசு சார்பு அமைப்பாக இருக்கலாம் என்ற சந்தேகம் நீண்டகாலமாக இருந்தாலும், நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் இதர ஆதாரங்களின்படி இந்த தாக்குதல் நடவடிக்கைகளுக்கு டூட்ஸி இனக்குழுவினரே காரணம் என்கிற வலுவான வாதமும் இன்றளவும் உள்ளது.



ஆக மொத்தம், ஒரு கண்டம், ஒரே இனத்தவர் (ஆப்ரிக்கர்கள்) ஒரே மாதிரியான சமூகச் சூழலில் வாழ்ந்தவர்கள், ஒரே மாதிரியான பொருளாதார சூழலை எதிர்கொண்டவர்கள், காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்தவர்கள். என-னும் ருவாண்டா, புருண்டி ஆகிய இரண்டு நாடுக-ளிலும் வாழ்ந்த, வாழ்ந்துவரும் ஹூட்டு மற்றும் டூட்சி இனக்குழுவினரிடையே தொடர்ந்த, தொடரும் இனமோதல்கள் இரு நாடுகளிலும் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன.

எவ்வாறாயினும், தமது இனக்குழுவைச் சாந்த தமது இருநாடுகளின் அதிபர்களும் படுகொலை செய்யப்பட்டது ஹூட்டு இனக்குழுவினரை கோபம், ஆவேசம் மற்றும் உணர்ச்சிகளின் உச்சத்திற்கு இட்டுச் சென்றது. அதன் விளைவு டூட்ஸி இன மக்களின் மீதான இனப்படுகொலை வெறியாட்டமாக மாறியது.

இந்த படுகொலை மற்றும் இனவெறியாட்டத்தின் பின்புலம் என்பது அங்கு 1990ஆம் ஆண்டில் தொடங்கிய உள்நாட்டு யுத்தமாகும். அது பெருங்கதை. இலங்கையில் நிலவிய இனப் பாகுபாடுகள், புறக்கணிப்புகள், பழிவாங்கல்கள் போன்ற பல விஷயங்கள் ருவாண்டாவிலும் இடம்பெற்றன. அதை மற்றொரு கட்டுரையில் உங்களுடன் பகிர்ந்துகொள்ள முயல்கிறேன்.

சுருங்கக் கூறுவதனால், ஆட்சியில் இருந்த ஹூட்டு அரசிற்கும் அவர்களுக்கு எதிராக பல அம்சங்களை மையப்படுத்தி போராட்டங்கள் தொடர்ச்சியாக வெடித்திருந்தன. ஹூட்டு தலைமையிலான ஆட்சியை அகற்ற ருவாண்டாவின் தேசப்பற்று முன்னணி எடுத்த முயற்சி தோல்வியடைந்தாலும், அவர்கள் நாட்டின் வடக்கு பகுதியில் கணிசமான நிலப்பரப்பை கைப்பற்றினர்.

உள்நாட்டு யுத்தம் ஒரு ஸ்தம்பித நிலையை எட்டிய சூழலில், இருதரப்பும் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனைக்கு தீர்வுகாண முன்வந்தன. அந்த பேச்சுவார்த்தைகள் 1992ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. இதையடுத்து அதிகாரப் பகிர்வு தொடர்பில் 1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் "அரூஷா உடன்பாடு" எட்டப்பட்டது.

அதிகாரப் பகிர்வு என்று கூறும் உடன்படிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அப்படியான ஒரு செயல்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கடும்போக்குவாத ஹூட்டுகள் தரப்பு கூறிவிட பேச்சுவார்த்தை அர்த்தமற்று போனாலும் திரைமறைவில் அதை செயற்படுத்த முன்னெடுப்புகள் இடம்பெற்றன.



ஆனால், இருநாட்டு அதிபர்கள் பயணித்த சிறிய ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட அனைத்து பேச்சுவார்த்தை மற்றும் சமாதான திட்டங்களும் தவிடுபொடியாயின. அதன் விளைவாக நீறு பூத்த நெருப்பாக இருந்த இன முரண்பாடுகள், வெறுப்புகள் எரிமலையாக வெடித்தன.

ஏப்ரல் 7ஆம் திகதி தொடங்கி ஜூலை 15 வரை தொடங்கிய இனவெறியாட்டத்தில் ஐந்து லட்சம் தொடங்கி எட்டு லட்சம் வரையிலான டூட்ஸி இன மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அரசின் இராணுவம், பொலிஸ் மற்றும் துணை இராணுவப் படைகளில் பெரும்பான்மையாக இருந்த ஹூட்டு பிரிவினர் கண்ணில் கண்ட டூட்ஸி மக்களை வகைதொகையின்றி படுகொலை செய்யும் வெறியாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த நூறு நாட்களில் பாடசாலைகள், மருத்துவமனைகள் மீதும் தாக்குதல் இடம்பெற்றது. பெண்கள் மீதான பாலியல் வன்செயல் போர-ாயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான சிறார்கள் துடிதுடித்து இறந்தனர்.

எனினும், இந்த இனப்படுகொலையின் தாக்கமும் கோரமும் உலகை உலுக்கினாலும், மிகவும் துரதிஷ்டமான வகையில் இந்த இனப்படுகொலையை வலிந்து தலையிட்டு நிறுத்த உலகின் எந்த நாடும் முன்வரவில்லை.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கு வருவதை தவிர்க்க இயலாது.

30 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இனப்படுகொலைகளின் போது "சர்வதேச சமூகம் எங்களை காப்பாற்ற தவறியது" என்று ருவாண்டாவின் தற்போதைய ஜனாதிபதியும், ருவாண்டா தேசப்பற்று முன்னணியின் தலைவராகவும் இருந்த பால் ககாமே இந்த ஆண்டின் நினைவுநாள் அஞ்சலிகளின் போது சுட்டிக்காட்டினார்.

"ஒன்று அவமானம் அல்லது கோழைத்தனம் இந்த இரண்டில் ஒரு காரணத்தால் சர்வதேச சமூகம் எம்மை கைவிட்டது. அப்போது கற்றுக்கொண்ட பாடங்கள் எமது தேசத்தின் சரித்திரத்தில் இரத்தத்தால் பொறிக்கப்பட்டுள்ளது".

ருவாண்டாவில் இனப்படுகொலை நடைபெற்ற போது அமெரிக்காவின் அதிபராக இருந்தவர் பில் கிளிண்டன். உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவும் அந்த இனப்படுகொலையை தடுக்கவில்லை.

"இந்த இனப்படுகொலை எனது ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வி" என்று பில் கிளிண்டன் பின்னர் கூறியிருந்தார்.




800,000 பேர்வரை படுகொலை செய்யப் பட்டிருக்கலாம் என்று கூறப்படும் நிலையில், ஊடகங்கள் அது தொடர்பிலான செய்திகளை தொடர்ச்சியாக வெளியிட்டாலும் சர்வதேச சமூகம் ருவாண்டாவில் உடனடியாக தலையிட்டு அந்த இனப்படுகொலையை தடுத்து நிறுத்த முயலவில்லை. அது சர்வதேச சமூகத்தின் மீதான ஒரு களங்கமாகவே இன்றளவும் உள்ளது.

மிகவும் கோரமான வகையில் ருவாண்டா இனப்படுகொலை இடம்பெற்று 30 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், ஆப்ரிக்க ஒன்றியத்தின் தலைவரான மூசா ஃபால்கி மஹமட் அந்த படுகொலைகள் வெட்கி தலைகுனிய வேண்டிய ஒரு சம்பவமாகும் என்று வர்ணித்துள்ளார்.

"ஆப்ரிக்க ஒன்றியத்தில் இருக்கும் நாடுகள் மட்டுமன்றி, எந்தவொரு நாடும் இந்த படுகொலையிலிருந்து தம்மை குற்றவாளி இல்லை என்று விடுவித்துக்கொள்ள முடியாது" என்று கூறுகிறார் மஹமட்.

ருவாண்டாவில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என்பது ஏற்கப்பட வேண்டும் எனவும் ஆப்ரிக்க ஒன்றியத்தின் இப்போதைய தலைவர் வலியுறுத்துகிறார்.

"நடைபெற்ற அந்த இனப்படுகொலை அங்கீகரித்து அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் துணிவும் மனப்பக்குவமும் தேவை. எவ்வளவு காலமானாலும் அதிலிருந்து நாம் விலகிச் செல்ல முடியாது".

மெல்ல மெல்ல சர்வதேச நாடுகள் இப்போது வாய் திறக்க ஆரம்பித்துள்ளன. இப்போது அவர்கள் கூறுவதை 30 ஆண்டுகளுக்கு முன்னர் செய்திருந்தால், எட்டு லட்சம் உயிர்களில் பாதியளவேனும் காப்பாற்றாப்பட்டிருக்கும்.

ருவாண்டா இனப்படுகொலையில் பிரெஞ்சு அரசுக்கு இருந்த பங்கை இப்போது அந்நாட்டின் அதிபராக இருக்கும் இமானுவேல் மெக்ரான் எற்றுக்கொள்கிறார்.

"அந்த இனப்படுகொலையில் பிரான்சின் பங்கை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதுமட்டுமல்ல மிகப்பெரிய அளவில் அந்த இனப்படுகொலை அவலம் விரிவடையும் என்று வந்த எச்சரிக்கைகளையும் நாங்கள் ஏற்க மறுத்திருந்தோம். இந்த இனவெறியாட்டத்தை மூடிய கதவுகளுக்கு பின்னர் அமர்ந்திருந்த நாங்கள் அவர்களை முற்றாக கைவிட்டோம்" என்று இப்போது விளக்கமளிக்கிறார் பிரான்சின் அதிபர்.




(தொடர்ச்சி 25 பக்கம்)

# கனடாவில் புகழ்பெற்ற மூத்தோர் பாடல்போட்டி நிகழ்ச்சியான 'சந்தியா ராகம்–2024' இன் 4வது சுற்று சிறப்பாக நடைபெற்றது





















கனடாவில் புகழ்பெற்ற மூத்தோர் பாடல்போட்டி நிகழ்ச்சியான "சந்தியா ராகம்-2024" இன் 4வது சுற்று சிறப்பாக நடைபெற்றது. "விலா கருணா" என்னும் மூத்தோர் நலன் காக்கும் நிலைய" ஸ்தாபகரும் அதிபருமான திருமதி இந்திராணி நாகேந்திரம் அவர்களின் ஏற்பாட்டில் இந்த போட்டி நிகழ்ச்சி 6வது ஆண்டாக நடைபெற்றுவருகின்றது.

மார்க்கம் நகரில் நடைபெற்ற இந்த 4வது சுற்று நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான ஆர். என். லோகேந்திரலிங்கம் தனது பாரியார் சகிதம் அழைக்கப்பெற்றிருந்தார்.

அன்றைய தினம் பாடக பாடகிகளின் பாடல்களுக்கு இசை வழங்கிச் சிறப்பித்தார்கள் "ஜெரோம்" இசைக்குழுவினர். எல்லாமாக 11 பாடக பாடகிகள் அன்றைய போட்டியில் பங்குபற்றினார்கள். நடுவர்களாக பிரபல இசைக் கலைஞர்கள் பாபு, திருமதி உசா. பாடகர் நல்லநாதன். மற்றும் சாந்தினி வர்மன் ஆகியோர் பணியாற்றி அதை சிறப்பாகச் செய்தார்கள். அனைத்துப் பாடக பாடகிகளும் தங்களால் இயன்ற அளவிற்கு சிறப்பாகப் பாடல்களை வழங்கினார்கள். அன்றைய போட்டி நிகழ்ச்சி ஒரு மேடை நிகழ்வாகவே அனைவராலும் ரசிக்கப்பெற்றது.

இறுதியில் 3 போட்டியாளர்கள் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு மிகுதி எட்டுபோரும் அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்கள். இறுதிப் போட்டி விரைவில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




WISHING YOU A VERY HAPPY
TAMIL NEW YEAR
இனிய
தமிழ் புத்தாண்டு
வாழ்த்துகள்
RAYMOND CHO
MPP - Scarborough North
Constituency Office
4559-B Sheppard Ave E, Scarborough, ON M1S 1V3
416-297-5040
raymond.choco@pc.ola.org
raymondcho.ca
VT INCEPIT FIDELIS SIC PERMANET
Ontario




# இன்றைய நேரம் தான் நேற்றைய நேரம்

## நேற்றைய விலையில் கொண்டோவை இன்று வாங்குங்கள்

## பிக்கரிங் நகரின் சிறந்த பெறுமதி கொண்ட ஒரு புதிய வரவு! வரலாற்றில் புதிய கொண்டோ விலைகளில்!

விலைகள் அதிகரிக்கும் முன்பாகவே நீங்கள் கொண்டோக்களை வாங்கிக் கொள்வதை நாம் விரும்புகின்றோம். அதை நீங்கள் இப்போதே செய்யலாம். ஏனென்றால் **Highmark** வரலாற்றில் குறைந்த விலைகளில் புதிய வரவாக நவீன கொண்டோக்களை வழங்குகின்றது!

அத்துடன் எமது விசேடமான சேமிப்புத் திட்டம். எமது **Highmark** இல் புதிய கொண்டோ ஒன்றை வாங்கினால்

**$50,000** வரையில் கழிவைப் பெறலாம்.

வட்டி வீதம் குறையும் போது கொண்டோக்களின் விலைகள் அதிகரிக்கலாம். எனவே தற்போது வாங்கிக் கொள்வதே சரியானதாகும். எமது விற்பனை முகவர் ஒருவரை இன்றே அழைத்து தாங்கள் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

குறைந்த $500களில் இருந்து பிக்கரிங் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள எமது கொண்டோக்கள் 3 படுக்கை அறைகளைக் கொண்டவை.




Off-site Sales Gallery Location and Hours:

633 KINGSTON ROAD, PICKERING

Mon. – Thu. 12pm – 6pm
Friday – Closed
Sat. & Sun. 12pm – 5pm

# TheHighmark.ca

CALL: 905-831-1755 or EMAIL: info@thehighmark.ca

HIGHMARK

FOLLOW US

* Prices, promotions, and specifications are subject to change without notice. All promotions are subject to terms and conditions. Renderings are artists' concepts. See Sales Representative for details. Exclusive Listing Brokerage Milborne Group Brokerage. Brokers Protected. E. & O.E.

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support"வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல் எனும் ,முதியவர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலான சேவைகளை வழங்குகிறது.

## இலவச சேவை

- உணவு விநியோகம்,
- தன்னார்லர்கள் மூலம் போக்குவரத்து சேவை: மருத்துவமனை நியமனங்கள், மருத்துவரைபார்வையிடல், மளிகைப்பொருள் கொள்வனவு நிலையங்கள் போன்றவை
- முதியோருக்கான சிறு வீட்டு பராமரிப்பு
- நண்பர்களாக வீட்டுக்கு வருகை தருதல் - நட்பு உரையாடல்கள், மற்றும் திறன் வளர்ப்புஉதவிகள். (Zoom, YouTube, google search...)
- போக்குவரத்து சேவை - வழிபாட்டு தலங்கள், Mall, உணவு விடுதிகள் போன்றவை.

## எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

## டுறம் தமிழ் ஒன்றியம்

### வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில -ஆதரவளித்தல்



வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

பாதிக்கப்படக் கூடிய மற்றும் குறைந்த வருமானம் உடைய முதியவர்கள்

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவை வழங்கப்படுகின்றது

PICKERING, AJAX,WHITBY, OSHAWA CLARINGTON, BROCK, UXBRIDGE ,SCUGOG,

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு - வீட்டில் ஆதரவளித்தல்

### இலவச உணவு விநியோக சேவை

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவைவழங்கப்படுகின்றது

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog

மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

dtaseniorsinhomesupport.ca

Canada

## Durham Tamil Association Evolving Elder Care -in Home Support for seniors

### Free Training

- Free Training and a certificate of completion from Computek College in Ajax
- 50 volunteer hours placement

### Benefits

- Free Vulnerable Check
- Unlock valuable life skills with Free Standard CPR and First Aid Training
- Volunteer Travel Expense $0.58/km
- Join us to make a postive impact on seniors lives while gaining valuable skills and exprences.

### Contact US


**Office Hours: Monday through Friday 9:00am - 5:00PM**

**Contact Number:**

- **(647) 968-9549**
- **(647) 286-9549**

**Durham Tamil Association**

66 Harwood Ave, S.Ajax L1S 2H6




### Serving Eight Municipalities

- Brock
- Uxbridge
- Scugog
- Pickering
- Oshawa
- Clarington
- Ajax
- Whitby

**For More Information Visit the website: dtaseniorsinhomesupport.ca**

## Volunteers Needed!

### தன்னலவாளர்கள் தேவை!




**Join our volunteer team and gain more than just experience – unlock valuable life skills while making a positive impact on seniors' lives in Durham!**

**Volunteer Gala : Twice a Year!**

- **Summer Gala 2024**
- **Winter Gala 2024**
- **Spring Gala 2025**
- **September Gala 2025**

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

# சித்திரை வருடப்பிறப்பு

## சிறப்பாக நடைபெறவுள்ளது



மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் 13-04-2024 சனிக்கிழமை காலை 8:00 தொடக்கம் பூசைக்கள் அரம்பமாகி 10:44க்கு வருடம்பிறக்கும் நேரம் சிறப்பு ஆராதனை நடைற்று மகேஸ்வரபூசையுடன் முடிவடையும்.

23-04-2024 செய்வாய்க்கிழமை காலை 8:00 மணிமுதல் சித்திரா பௌர்ணமி பூசை சிறப்புடன் நடைபெறும்.

அன்னையின் அருள்வேண்டி செழிப்புடன் வாழ அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். அத்துடன் நீங்கள் விரும்பிய வேப்பிலை, பழம், பூ என்பன கொடுத்துதவலாம்.

**80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario**

**(416) 436-9647**


# இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## Happy Tamil New Year

அனைவருக்கும் எனது இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள்!

Wishing you and your families a new year filled with blessings, joy, and prosperity!



JAMAAL ஜமால் 麦智谋

MYERS

CITY COUNCILLOR
SCARBOROUGH NORTH

councillor_myers@toronto.ca | jamaalmyers.com | (416) 338-2858



# உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



## Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



**Coverall Group Inc.**

Contact: Siva 416-706-8160

# எமது வர்த்தக சம்மேளனத்தின் இயக்குனர் சபைக்கு ஆர்வமுள்ள தகுதியானவர்கள் இணைந்து கொள்வதனாலேயே தொடர்ச்சியாக அது வளர்ச்சிப் படிகளில் ஏறிக்கொண்டிருக்கின்றது

## கனடா உதயனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் முரளி சிவகுரு அவர்கள் உற்சாகத்துடன் தெரிவிப்பு

*(மார்க்கம் நகரலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)*



”எமது கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் இயக்குனர் சபைகளுக்கான தெரிவு ஒவ்வொரு இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறுகின்றது. இந்த தேர்தலின் மூலம் ஆர்வத்தோடு பணியாற்றக்கூடிய தகுதியானவர்கள் தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதனாலேயே தொடர்ச்சியாக எமது சம்மேளனம் வளர்ச்சிப் படிகளில் ஏறிக்கொண்டிருக்கின்றது. இதனால் அங்கத்தவர்களுக்கும் கனடிய தமிழ்ச் சமூகத்திற்கும் பயனுள்ள ஒரு அமைப்பாக நாம் செயற்பட்டு வருகின்றோம்”

இவ்வாறு கடந்த 10-04-2024 புதன்கிழமை கனடா உதயனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் முரளி சிவகுரு அவர்கள் உற்சாகத்துடன் தெரிவித்தார். மார்க்கம் நகரில் உள்ள சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நேர்காணலின் போது சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய நிறைவேற்றுப் பணிப்பாளருமான கென் கிருபா அவர்கள் நேர்காணல் இடம்பெறுவதற்குரிய ஏற்பாடுகளைக் கவனித்தார்.

மிகுந்த சுவாரஸ்யமாக நகர்ந்து சென்ற இந்த நேர்காணலின் போது உதயன் பிரதம ஆசிரியரின் கேள்விகளுக்கு மிகுந்த உற்சாகத்துடன் பதிலளித்தார் தலைவர் முரளி சிவகுரு அவர்கள்.

முதலாவது கேள்வியாக “1991ம் ஆண்டு நிறுவப்பெற்ற கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 18வது தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு மிகுந்த ஆர்வத்தோடு பணியாற்றிக்கொண்டிருக்கின்ற தாங்கள். இதன் அங்கத்தவராக எப்போது இணைந்து கொண்டீர்கள்? அவ்வாறு இணைந்து கொள்ள வேண்டிய ஆர்வம் எவ்வாறு தங்களுக்கு ஏற்பட்டது? என்று கேட்டபோது முரளி சிவகுரு அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்

”எமது வர்த்தக சம்மேளனம் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவருவதை நாம் அவதானித்து வந்தேன். 2001ம் ஆண்டு என்னையும் சம்மேளனத்தில் இணைந்த கொள்ளும்படி வர்த்தகத்துறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நண்பர்கள் சிலர் தூண்டினார்கள். எனவே இதில் இணைந்து தமிழ் பேசும் வர்த்தகச் சமூகத்திற்கு ஆதரவு வழங்கி ஒரே




குடையில் நிற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் இணைந்து கொண்டேன். அத்துடன் நான் ஈடுபட்டுள்ள வர்த்தகமானது தமிழ் மக்களைச் சார்ந்தது அல்ல என்றாலும் எமது சமூகத்தின் வளர்ச்சியில் வர்த்தகத்துறை தங்கியுள்ளது எனபதையும் நன்கு உணர்ந்து கொண்டே சம்மேளனத்தோடு தொடர்ச்சியாகப் பயணித்து வருகின்றேன். என்னைப் போலவே பல அங்கத்தவர்களும் அதே நோக்கம் கொண்டவர்களாக விளங்குகின்றார்கள்” என்றார்.

பிரதம ஆசிரியரின் அடுத்து கேள்விக்காக காத்திருந்த முரளி சிவகுரு அவர்களிடம் பின்வரும் கேள்வி முன்வைக்கப்பட்டது.

கனடிய வர்த்தக சம்மேளனம் நடத்திய முதலாவது “வாணிப வசந்தம் “ என்னும் கண்காட்சி 1993ல் ஒரு பாடசாலை சிறு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த வர்த்தக சம்மேளத்தை நிறுவிய “பிறைட்டன் அரியரட்ணம் மற்றும் ஜெயநாதன் ஆகியோர் சக அங்கத்தவர்களுடன் இணைந்து அதை நடத்தினார்கள். ஆனால், தற்போது கனடிய வர்த்தக சம்மேளனம் நடத்துகின்ற விருது விழா ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இலட்சக்கணக்கான டாலர்கள் பொருட்செலவில் நடைபெறுகின்றது இந்த வளர்ச்சியை எவ்வாறு நாம் கருதலாம்?

இந்த வளர்ச்சியை எமது சம்மேளனம் அடைய சுமார் 30 வருடங்கள் எடுத்துள்ளது. இதற்கு பின்னால் எத்தனையோ பேரின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு போன்றவை கட்டாயம் இருந்திருக்க வேண்டும். எமது கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தில் கடந்த காலங்களில் இயக்குனர் சபை அங்கத்தவர்களாக பணியாற்றியவர்கள் தங்கள் நேரத்தை அர்ப்பணித்து தான் பணிகளைச் செய்கின்றார்கள். எனது அனுபவமும் அதே போலத்தான். அதற்கு மேலாக “ஒற்றுமையே பலம் “ என்ற கூற்று காரணமாக உள்ளது. நாம் ஒற்றுமையாகவே திட்டங்களைத் தீட்டுகின்றோம். தீவிரமாக யோசித்து விவாதித்த பின்னரேயே இறுதி முடிவு எடுக்கின்றோம். இது தான் எமது சம்மேளனத்தின் வளர்ச்சிக்கு காரணமாக விளங்குகின்றது என்று நான் உறுதியாக நம்புகின்றேன்” என்று பதிலளித்தார் முரளி சிவகுரு அவர்கள்

அடுத்த கேள்வியாக ஒரு வித்தியாசமானதொன்றை சம்மேளனத்தின் தலைவரிடம் ஒப்படைத்தார் “உதயன்“ பிரதம ஆசிரியர் அவர்கள்.

”ஒரு தேசத்தில் புதிதாய் வந்து குடியேறும் ஒரு இனம் அல்லது சமூகமானது வர்த்தகத் துறையில் வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்தால் தான் அங்கு உறுதியான தளத்தை அமைத்துக்கொள்ளலாம் என்று பொருளாதார வல்லுனர்களின் கூற்றுக்கள் தெரிவிக்கின்றன.

கனடாவில் தமிழ் மக்களின் தற்போதைய இருப்பை இந்த வகையில் எவ்வாறு நீங்கள் பார்க்கின்றீர்கள்?

இந்தக் கூற்றில் உண்மை இருக்கின்றது என்பதை நான் ஒத்துக் கொள்கின்றேன். அதற்கு எமது கனடிய தமிழர் சமூகம் ஒரு உதாரணமாக விளங்குகின்றது என்பதையும் நான் உறுதியாக நம்புகின்றேன். ஏனென்றால் எமது தமிழர் சமூகத்தில் வர்த்தகத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களில் பலர் வளர்ச்சியடைந்துள்ள காரணத்தால் அவர்களில் பலர் எமது தமிழர் சமூகத்தையும் முன்னேற்ற வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்கள் ஆதரவை வழங்குகின்றார்கள். கனடாவிற்கு 1980ம் ஆண்டு தொடக்கம் வந்து குடியேறிய எமது தமிழ் மக்கள் ஆரம்பத்தில் ஏனைய நிறுவனங்களிற்கு சென்று தொழில் வாய்ப்புப் பெற்றார்கள். ஆனால் தற்போது. எமது தமிழ்ச் சமூகத்தைச் சார்ந்த பல வர்த்தகத்துறை வெற்றியாளர்கள் இன்று “தொழில் வழங்கும் நிறுவன அதிபர்களாக உயர்ச்சியடைந்துள்ளார்கள். அவர்ளில் சிலர் எமது சமூகத்தைச் சார்ந்தவர்கள் அல்லது எமது மொழி பேசுகின்றவர்கள் என தங்கள் இனம் சார்ந்தவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றார்கள். இதனால் அந்த நிறுவனங்களும் உயர்ந்து எமது மக்களும் வாழ்க்கையில் உயர்வைக் காண்கின்றார்கள் என்று நான் நிச்சமாக நம்புகின்றேன்” என்று முடித்தார் சம்மேளனத்தின் தலைவர் முரளி சிவகுரு அவர்கள்

முகத்தில் ஒரு புன்னைகையுடன் தலைவர் அவர்களின் பதிலைக் கேட்டவண்ணம் இருந்த உதயன் பிரதம ஆசிரியர் பின்வரும் கேள்வியை அவரை பார்த்து கேட்கின்றார்.

கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் வளர்ச்சியையும் அதன் நிர்வாகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சாதகமான மாற்றங்களையும் நான் கவனித்து வருகின்றேன். உதாரணமாக உதவித் தலைவர்கள் சிலர் வெவ்வேறு விடயங்களைக் கவனிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இந்த மாற்றம் காரணமாக சம்மேளனம் அடைந்த வெற்றிகளை குறிப்பிடுவீர்களா?

நிச்சமாகக் கூறுவேன் ஆசிரியர் அவர்களே என்ற முத்தாய்ப்புடன் தனது பதிலை பகிரத் தொடங்கினார் முரளி சிவகுரு அவர்கள். ஆமாம் கடந்த பத்து வருடங்களாத் தான் இவ்வாறான நிர்வாகக் கட்டமைப்பை எமது சம்மேளனம் வகுத்துக் கொண்டது என்று நான் நம்புகின்றேன். ஏனென்றால் எமது கனடிய வர்த்தக சம்மேளனத்தின் செயற்பாடுகள் மற்றும் சமூகம் சார்ந்த ஈடுபாடு ஆகியன அதிகரித்த வண்ணம் உள்ளதால். இயக்குனர் சபையான அனைத்துப் பணிகளையும் ஒரே நபரிடம் ஒப்படைக்காமல் தகுதியானவர்களிடம் பகிர்ந்து கொடுக்கும் “புதிய“ அணுகுமுறையை கடைப்பிடிக்கத் தொடங்கியது. உதாரணமாக தலைவரான எனக்கு உதவியாக ஐந்துக்கு மேற்பட்ட உதவித் தலைவர்கள் உள்ளார்கள். அவர்கள் பல பணிகளை பொறுப்பேற்று சரியாகச் செய்து முடிக்கின்றார்கள். உதாரணமாகச் சொன்னால் எமது சம்மேளனத்திற்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொண்டு இதை பலப்படுத்த வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படுகின்றபோது அந்தப் பொறுப்பை உபுதலைவர்- புதிய அங்கத்துவம்“ என்ற பகுதிக்கு உப-தலைராக உள்ளவர்கள் அங்கத்தவர்களை அதிகளவில்



இணைத்துக் கொள்ள கடுமையாக உழைக்கின்றார். அதிலும் வெற்றியும் கண்டுள்ளார். இவ்வாறு தான் எமது அனைத்து இயக்குனர் சபை உறுப்பினர்களும். இதற்கு மற்றுமொரு காரணம். எமது சம்மேளனத்தில் இயக்குனர் சபையில் பணியாற்றுகின்றவர் எவ்வித ஊதியத்தை எதிர்பார்ப்பதில்லை. அவர்கள் தங்கள் நேரத்தையும் அவர்களிடத்தில் உள்ள அனுபவத்தையும் எமது சம்மேளனத்திற்காக அர்ப்பணிக்கின்றார்கள்”என்று மிகவும் ஏற்புடையதும் நீண்டதுமான பதிலைத் தந்து விட்டு ஓய்ந்தார் முரளி சிவகுரு அவர்கள்

5. எமது அவதானிப்பில் தாங்கள் தலைவராகப் பதவியேற்ற காலப்பகுதியில் அல்லது அதற்கு சில வருடங்களுக்கு முன்னர் தொடக்கம் சம்மேளனத்தின் செயற்பாடுகள் இளைய தலைமுறையினரை கவர்ந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் வணிகத்துறையில் அதிகளவு இளம்பெண்கள் ஈடுபாடு கொண்டு வர்த்தக சம்மேளனத்திலும் இணைந்துள்ளதார்களே? அவர்களுடைய வருகையை தாங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

ஆமாம்! நிச்சயமாக மகளிர் அங்கத்தவர்கள் எமது சம்மேளனத்தில் இணைந்த கொள்வதை நாம் ஊக்கப்படுத்தி வருகின்றோம். பெண்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்ற முனைப்பு உலகெங்கும் ஊன்றி பேணப்பட்டு வருகின்ற வேளையில், சுய வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டுள்ள மகளிர் இயக்குனர்சபையிலும் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். அத்துடன் எமது சம்மேளனம் கடந்த பல வருடங்களாக “சர்வதேச பெண்கள் தினத்தை“ நாம் சிறப்பான முறையில் கொண்டாடி வருகின்றோம். இந்த விழாக்களில் பெண்கள் தலைமைத்துவம் பற்றிய கோட்பாட்டை முன்வைத்து விவாத அரங்குகளை நடத்துகின்றோம். இந்த முயற்சியின் முழுமையான பயன்பாடு இன்னும் சில ஆண்டுகளில் “வெள்ளிடை மலையாகத்“ தெரிகின்றது எனலாம். இன்னும் சொல்லுவதானால். இளையோரும் மகளிரும் எமது சம்மேளனத்திற்கு இன்றியமையாதவர்களாக உள்ளார்கள் என்று மிகவும் பொருத்தமான பதிலை எமக்களித்தார் தலைவர் முரளி சிவகுரு அவர்கள்.

எதிர்வரும் 20-04-2024 அன்று சனிக்கிழமையன்று கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தில் வருடாந்த விருதுகள் வழங்கும் விழா நடைபெற உள்ள நிலையில் அது தொடர்பான பல பொறுப்புள்ள பணிகள் அடங்கியுள்ள வேளையிலும் எமது வேண்டுகோளை ஏற்று இந்த நேர்காணலைச் செய்ய ஒத்தாசையாக இருந்த கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அவர்களுக்கும் சம்மேளனத்தின் நிறைவேற்றுப் பணிபாளராகப் பணியாற்றி வரும் கென் கிருபா அவர்களுக்கும் நன்றி சொல்லி விடைபெற்றோம் நாம்.



# அநுரகுமாரவின் "யாழ் உரை"யும் தமிழ் கட்சிகளிடம் சில கேள்விகளும்

**"யுத்தம் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் 40,000 இராணுவ வீரர்களை இணைத்தமை, யுத்தத்தில் ஆயிரக்கணக்கான தமிழர் கொல்லப்பட்டபோது அதுகுறித்து குறைந்தபட்சம் அனுதாபம் கூட வெளியிடாமை போன்ற பல்வேறு பிரச்சினைகுரிய விடயங்கள் அநுரகுமார வின் கட்சியில் காணப்படுவதக்க கூறும் நீங்கள், இறுதி யுத்தத்தை வன்னியில் நின்று தலைமையேற்று நடத்தி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கு காரணமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்டபோது அவருக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தமிழ் மக்களை கோரியதுடன் நீங்களும் ஆதரவாக வாக்களித்தமை எந்த வகையில் நியாயம்?"**

**- கே. பாலா**

எமக்கு வாக்களியுங்கள் என்றோ, 13 பிளஸ் தருகின்றோம் வாக்களியுங்கள் என்றோ சமஷ்டியை தருகின்றோம் வாக்களியுங்கள் என்றோ கூறுவதற்கு இங்கு நாம் வரவில்லை. உங்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கதைக்க நாங்கள் உங்களை சந்திக்க வரவில்லை.வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதமின்றியும் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற இன பேதமின்றியும் இந்து, இஸ்லாம், பௌத்தம் கிறிஸ்தவம் என்ற மத பேதமின்றியும் நாம் அனைவரும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணைய வேண்டும். நாட்டை புதியதொரு பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும். இதற்கான கலந்துரையாடலுக்காகவே வந்துள்ளோம் என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழ் மக்களுக்கு கூறிய விடயம் இன்று தமிழர் அரசியல் பரப்பில் கண்டனங்களையும் கடும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண மாநாட்டில் உரையாற்றுவதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திசாநாயக்க கடந்த 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்தார். அதற்கு முன்னதாக அவர் இந்தியா, சென்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இந்திய அரசியல் உயர்மட்டங்களுடன் சந்திப்புக்களை நடத்திவிட்டு அதன் தொடர்ச்சியாக கனடாவுக்கு சென்று அங்கு அரசியல் கூட்டங்களை நடத்திய நிலையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததால் அவரின் வருகை தமிழ் மக்களினதும் தமிழ் அரசியல் கட்சிகளினதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

யாழ்ப்பாணம் வலம்புரி சங்கிலியன் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண மாநாட்டில் உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க,

இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ள போதும், வடக்கிலுள்ள மக்கள் அதனை கொழும்பில் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தல் என்றும் தமக்கு சம்பந்தமில்லாத தேர்தல் என்றும் கூறுகின்றனர். நீங்கள் வாக்களிக்காது இருக்கலாம், வேறு அரசியல் நிலைப்பாட்டை கொண்டிருக்கலாம் ஆனாலும் தேர்ந்தெடுக்கும் ஜனாதிபதியின் தீர்மானங்கள் நாட்டினதும் மக்களினதும் தலைவிதியை தீர்மானிக்கின்றது. இதனால் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்து வாழ முடியாது. ஆகவே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

எமக்கு வாக்களியுங்கள் என்றோ, 13 பிளஸ் தருகின்றோம் வாக்களியுங்கள் என்றோ சமஷ்டியை தருகின்றோம் வாக்களியுங்கள் என்றோ கூறுவதற்கு இங்கு நாம் வரவில்லை. உங்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கதைக்க நாம் உங்களை சந்திக்க வரவில்லை.வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதமின்றியும் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற இன பேதமின்றியும் இந்து, இஸ்லாம், பௌத்தம் மற்றும் கத்தோலிக்க பேதமின்றி நாம் அனைவரும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணைய வேண்டும். நாட்டை புதியதொரு பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும். இதற்கான கலந்துரையாடலுக்காகவே வந்துள்ளோம்.

பல்வேறு அரசியல் தலைவர்கள் எங்களை பற்றி கதைக்க தொடங்கியுள்ளனர். எங்களுக்கு எதிராக செயற்படுகின்றனர். மிகவும் தெளிவாக இரண்டு பிரிவுகள் உள்ளன. நாட்டை அழிவுக்கு கொண்டு சென்ற பிரபுக்கள் குழு பொதுமக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியனவே தெற்கில் உள்ளன. ஆனால் வடக்கில் எவ்வாறான பிளவுகள் உள்ளன. வடக்கு தெற்கிற்கு எதிராகவும், தெற்கு வடக்கிற்கு எதிராகவும் இருக்கக்கூடாது. அவர்களே எங்களை பிளவு படுத்துகின்றனர். எங்களிடம் இனம், மொழி ரீதியில் பிளவுகள் கிடையாது. இதனால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றும், நாட்டுக்கு என்ன தேவையாக உள்ளது என்றும் நீங்கள் சிந்திக்க வேண்டும்.

முதலாவதாக எங்களுக்கு தேசிய ஒற்றுமை அவசியம். சிங்கள, தமிழ் மக்கள் ஒருவருக்கொருவர் குரோதத்துடன் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. எங்களை மொழி, இனம், கலா சாரம் என பிரிக்கும் அரசியல் கலா சாரமே சுதந்திர காலத்தில் இருந்துள்ளது. பழைய தலைவர்கள் தமது அரசியல் அதிகாரத்திற்காக இனவாதத்தை கக்குகின்றனர். அதன் விளைவாக எமது காலத்தில் யுத்தத்தை செய்ய வேண்டியுள்ளது. வடக்கிலும், தெற்கிலும் பெருமளவான தாய்மார்கள் தாம் இழந்த பிள்ளைகளை எண்ணி கண்ணீர் வடிக்கின்றனர். எமது பழைய பரம்பரை இனவாதத்தை பரப்பியதால் எமது காலத்தில் யுத்தங்களை சந்திக்க வேண்டியேற்பட்டது. 30 வருட யுத்தத்தில் அதிகளவில் வடக்கு மக்களே பாதிக்கப்பட்டனர். இன்னும் எதிர்காலத்திற்கும் இவ்வாறான நிலைமை அவசியமாகுமா? எமக்கு இனவாத அரசியல் அவசியமா? என்று மனதை தொட்டு சிந்திக்க வேண்டும். எமது பரம்பரையில் யுத்தம் செய்தாலும் எமது பிள்ளைகள் அந்த நிலைக்கு செல்லக்கூடாது என்றே நாங்கள் நினைக்கின்றோம்.

இனவாதத்தை தோற்கடித்து நாட்டை கட்டியெழுப்பும் தேசிய அரசியலொன்று அவசியம். அனைத்து மக்களின் நியாயமான அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும்.அத்துடன் நாட்டை கட்டியெழுப்ப இரண்டு பாதைகள் உள்ளன. முதலாவது தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடி ஆராய்ந்து தீர்வுகளை வழங்க வேண்டும். அடுத்ததாக நாட்டின் பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக புதிய ஆட்சியை உருவாக்க வேண்டும். 76 வருடங்கள் பழமையான நாட்டை அழிவுப்பதைக்கு கொண்டு சென்ற அரசியலால் நாட்டுக்கு தீர்வுகளை வழங்க முடியுமா? அது தோல்வியடைந்த, அழிவுக்கு கொண்டு சென்ற அரசியல். மீண்டும் நாட்டின் நிர்வாக சுக்கானை அதே தரப்பினரிடம் வழங்கக் கூடாது.

இந்நிலையில் வடக்கின் அரசியல் தலைவர்களுக்கு நாங்கள் அழைப்பு விடுகின்றோம். தமிழ் மக்கள் முகம்கொடுத்துள்ள உண்மையான முக்கிய பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்ற எண்ணமுள்ள அரசியல் தலைவர்கள் இருக்கின்றனர். பிள்ளைகளின் கல்வி, தொழில்வாய்ப்பு பிரச்சினைகள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மீனவர்களின் பிரச்சினைகள், கலாசாரம் தொடர்பான பிரச்சினைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு வடக்கு மக்கள் முகம்கொடுக்கின்றனர். அவற்றுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று நினைக்கும் அரசியல் தலைவர்களுக்கு நாங்கள் அழைப்பு விடுகின்றோம். நாங்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைப்போம்.

வடக்கின் அரசியல் இரண்டு விதமாக இருக்கலாம். முதலாவது உண்மையாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்று சிந்திக்கும் அரசியல், இரண்டாவதாக வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்டு அவர்களின் அரசியலை வளர்க்க நினைக்கும் அரசியல் என்பன இருக்கலாம். மக்களுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் அரசியல் மூலமே வடக்கு மக்களின் பிரச்சினைகளுகளை தீர்க்கலாம். இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்று நினைக்கும் அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம். நாங்கள் ஒன்றிணைந்து எமது நாட்டின் அரசாங்கத்தை உருவாக்குவோம். நாங்கள் வடக்கின் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றோம். உண்மையான பிரச்சினைகளை தீர்க்க ஒன்றிணையவே அதனை செய்கின்றோம் என்று உரையாற்றியிருந்தார்.

அநுரகுமார திச நாயக்கவின் இந்த உரைதான் தமிழர் அரசியல் தரப்பால் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது.

அநுரகுமார திசநாயக்க யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையில் தமிழர்களுக்கான நம்பிக்கை ஒளிக்கீற்று எதுவும் தென்படவில்லை மாறாக ஏனைய சிங்களத் தலைவர்களை விடவும் தமிழர் நலன்கள் தொடர்பான மிகக் குறைந்தளவிலான கரிசனையுடனேயே அவர் பேசியிருக்கின்றார். தமிழர் பிரச்சினைக்குரிய விடயங்கள்அதேபோன்று யுத்தம் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் சுமார் 40,000 இராணுவ வீரர்களை இணைத்தமை, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட வடக்கு, கிழக்கு இணைப்பை பிரிப்பதில் முன்னின்று செயற்பட்டமை, யுத்தத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டபோது அதுகுறித்து குறைந்தபட்சம் அனுதாபம் கூட வெளியிடாமை போன்ற பல்வேறு பிரச்சினைக்குரிய விடயங்கள் அநுரகுமார திசாநாயக்கவின் கட்சியில் காணப்படுகின்றன.

அண்மைய காலங்களில் வட, கிழக்கு மாகாணங்களில் பௌத்த பிக்குகளின் பங்கேற்புடன் இடம்பெற்றுவரும் அத்துமீறல்கள் தொடர்பில் அநுரகுமார திசாநாயக்க ஒருமுறைகூட கண்டனத்தை வெளிப்படுத்தவில்லை. இன மதவாதமற்ற, அனைத்து மக்களுக்குமான சிறந்த தலைவர் என்ற ரீதியில் அநுரகுமார திசாநாயக்க முதலில் தன்னை முன்னிலைப்படுத்தவேண்டும். மேலும், 13ஆவது திருத்தம் அல்லது சமஷ்டி முறையிலான தீர்வு குறித்து எவ்வித உத்தரவாதத்தையும் வழங்குவதற்கு தான் வரவில்லை என்று கூறுபவருக்கு தமிழ் மக்கள் எந்த அடிப்படையில் வாக்களிப்பார்கள்?

தமிழர்களும் நாட்டின் சம பிரஜைகள் என்பதை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை யாழ் வந்த ஜே.வி.பி தலைவரின் திமிர் பேச்சு வெளிப்படுத்தி நிற்கின்றது. இணைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பு என்பதையும் ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை அத்துடன் 13 ஆவது அரசியலமைப்பு அதிகாரத்தையே தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வாக தர தயாரில்லை என்பதையும் அரசியல் உரிமைப் பிரச்சினை தமிழ் மக்களுக்கு உள்ளது என்பதையும் அவர் நிராகரித்துள்ளார். வடக்க கிழக்கு மக்களின் பிரச்சினை என்பது வெறும் பொருளாதாரம், அபிவிருத்தி மட்டுமல்ல. அவர்களுக்கு அரசியல் உரிமைப் பிரச்சினையே மிகவும் பிரதானமானது என்பதை அவர் அறியாதவர் போல் பேசுகின்றார்.

இலங்கை வரலாற்றில் பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், இலங்கை இந்திய ஒப்பந்தம் தமிழர்களுக்கான உரிமைப் பிரச்சினை உண்டென்பதை எடுத்தக்காட்டியிருக்கின்ற சூழ்நிலையிலும் யாழ்ப்பாணம் வந்த ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸநாயக்க 13 ஐ தருகின்றோம், 13 பிளஸ் தருகின்றோம் சமஸ்டி தருகின்றோம் என்று கொடுக்கல் வாங்கல் செய்ய வரவில்லை என திமிராகப் பேசிச் சென்றிருக்கின்றார். அத்துடன் தமிழ் மக்களின் அபிலாசைகளை சற்றும் புரிந்தவராக கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்க வில்லை.

இதன்மூலம் இப்போது தமிழ் மக்களுக்கு முன்னால் இருக்கும் ஒரே ஒரு குறைந்தளவு அதிகாரமுள்ள 13 ஆவது அரசியலமைப்பை கூட ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மிகவும் தெளிவாக புலப்படுகின்றது. இந்நிலையில் அனைவரும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணைய வேண்டும் புதிய பாதைக்கு செல்ல வேண்டும் என ஜே.வி.பியினர் கூறுவது ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழ் வாக்கு வங்கியை இலக்குவைத்தே என்பது புலனாகின்றது.

*(தொடர்ச்சி 21 பக்கம்)*



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers



30
வருட சேவைகள்

**வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு**
**இணங்க புதிய கிளை உதயம்!**

# கனகாம்பிகை

**உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த**
**வட்டி வீதத்தில் தங்க நகை அடவு**

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.™**
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சகதி மாநாடு: சுமந்திரனுக்கு அழைப்பா அல்லது அவர் அழையா விருந்தாளியா?

- நடராசா லோகதயாளன்



யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தி மாநாட்டில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரனுக்கு "தனிப்பட்ட அழைப்பு எதையும் தமது கட்சி விடுக்கவில்லை" என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாநாட்டுக்கு தமிழ் கட்சிகளுக்கான அழைப்பினை வழங்கினோம் அல்லாமல் தனிப்பட்ட அழைப்பு விடுக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கு தனிப்பட்ட அழைப்பை எமது கட்சி வழங்கவில்லை தானாக மாநாட்டுக்கு வந்தார். வந்தவரை வரவேற்கும் பண்பின் அடிப்படையில் அவரை அழைத்தோம் என்றார் இராமலிங்கம் சந்திரசேகரன்.

"ஆனால் மாநாட்டிற்கு வந்த சுமந்திரன் எமது கட்சியின் தலை-வர் அனுரகுமார திஸாநாயக்கவிடம் இந்தியாவைப் போல் சமஸ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் தமது கட்சியின் தலைவருக்கு கூறிய-தாக செய்திகள் வெளி வந்ததாக அறிந்தோம்".

அத்துடன் சமஷ்டியைப் பற்றியோ தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலோ தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் சம்பந்தன் மற்றும் சிறிதரனை விட நமது கட்சியின் தலைவர் அநுரவுக்கு நன்கு தெரியும் எனவும் செய்தியாளர்கிடம் கூறினார் இராமலிங்கம் சந்திரசேகரன்.

ஆகவே நாம் தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். ஆனால் தனி நபர்களை அழைத்து அரசியல் செய்யும் நோக்கம் தமது கட்சிக்கு இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால், யாழ்ப்பாணத்திற்கு தமது கட்சியின் மாநாட்டில் பங்கேற்க வந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுராகுமார திசநாயக்கா மூன்று தடவைகள் நேரடியாக தம்மை அழைத்ததையின் நிமித்தம் தான் அங்கு சென்றதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சுமந்திரனுக்கு தனிப்பட்ட அழைப்பை எமது கட்சி விடுக்கவில்லை எனவும் அழையா விருந்தாளியாக வந்தவரையே வந்தாரை வரவேற்கும் பண்பிற்கமைய வரவேற்றதாக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தமை தொடரபில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாநாட்டுக்கு வருகை தந்த சக நாடாளுமன்ற உறுப்பினர் அனுராகுமார திசநாயக்கா அன்று மாலை 3 தடவை தொலைபேசியில் நேரடியாக அழைப்பெடுத்து அழைப்பு விடுத்தார். இதன்போது கூட்டத்திலும் பங்குகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இருந்தபோதும் கூட்டத்தில் பங்குகொள்ள முடியாது கூட்டம் நிறைவுற்றதும் சந்திக்கின்றேன் எனக்கூறி கூட்டம் நிறைவுபெறும் எனக் கூறப்பட்ட நேரத்திற்குச் சென்றேன். அப்போதும் கூட்டம் நிறைவுபெறாத சூழலில் காத்திருந்து சந்தித்தேன்" என்று கூறிய சுமந்திரன் இதேநேரம் அனுரகுமார திஸாநாயக்கவிடம் பேசியதை சந்திரசேகரனிற்கு கூறவேண்டிய தேவை ஏறபடவில்லை என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

அத்துடன் சமஷ்டியைப் பற்றியோ தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலோ எனக்கோ, மூத்த தலைவர் சம்பந்தன் மற்றும் தமது கட்சியின் தலைவர் சிறிதரனை விட அநுரவுக்கு எவ்வளவு தெரியும் எனபவை உள்ளிட்ட ஏனைய விடயங்களையும் இடம்பெற்றவைகளையும் இராமலிங்கம் சந்திரசேகரன் தனது தலைவரிடமே கேட்டு அறிந்துகொள்ள முடியும் என்றார்.

வீணைமைந்தனின்

"தொலைந்துபோன வசந்தகாலங்கள்"

(போருக்கு முன்பும் பின்பும் ஒரு ஊரின் கதை)

(2ம் பதிப்பு)

அறிமுகவிழா

கனடிய தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில்
புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளின்

கண்காட்சியும் விற்பனையும்

காலம் - 20.04.2024
காலை - 10.00 மாலை 5.00 மணிவரை
இடம் - ரொரன்ரோ ஐயப்பசுவாமி கோயில் கலாச்சார மண்டபம்

பிரவேசம் இலவசம் அனைவரும் வாருங்கள்
ஆதரவு தாருங்கள்
வாசியுங்கள்! நேசியுங்கள்!

தொடர்புகளுக்கு - 514- 684 3604
416- 732 1608
416- 732 8021

கண்காட்சியில் இடம்பெறும் வீணைமைந்தனின் படைப்புகள்

மண்ணும் மனசும்
மறக்கத் தெரியாத மனசு
தமிழ் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்
நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும்
கவியின் காதல்
வாழ்த்தும் வணக்கமும்

HIGH SKY CANADA

- Visitor visas, Study visas, and Work Visas Applications
- Convert to WORK PERMIT from other status (Visitor)
- PR and Citizenship Application
- IELTS/ CELPIP/ CAEL Preparation
- Traffic Tickets and Pardon
- Tutoring for Students- ALL SUBJECTS, including TAMIL

CONTACT NOW!

Phone number/WhatsApp:
+1 (437) 365-5668
Email: highskycanada@gmail.com

(18 பக்கத் தொடர்ச்சி)

# அநுரகுமாரவின் "யாழ் உரை"யும் தமிழ் கட்சிகளிடம் சில கேள்விகளும்

இதேநேரம் இந்தியாவுக்கு சென்றிருந்த ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசநாயக்க, வடக்கு மீனவர் பிரச்சினை தொடர்பாகவோ எல்லை தாண்டும் இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்துமீறல் தொடர்பாகவோ அங்கு பேசியிருக்கவில்லை. அதேபோன்று குடாநாட்டுக்கு வந்திருந்தபோதும் கூட வடக்கு மீனவர்களுடைய பாதிப்புகள் தொடர்பாக எந்தவிதமான அக்கறையையும் கொண்டிருக்கவில்லை. அதேபோன்று கச்சதீவு விவகாரத்திலும் அது இலங்கைக்கே சொந்தம் என நாம் வெளிப்படுத்தியிருந்தபோதும் ஜே.வி.பி அது தொடர்பாக எவ்வித கருத்தையும் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கவில்லை என்றவாறாக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இவ்வாறான விமர்சனங்களை முன்வைக்கும் தரப்புக்களிடம் நடு நிலையாக சிந்திக்கும் தரப்பாக இருந்து ஒரு சில கேள்விகளை மட்டும் எழுப்ப வேண்டியுள்ளது. அதாவது,

ஜே.வி.பி. தலைவரான அநுர குமார திஸாநாயக்க 13 ஆவது திருத்தம், சமஸ்டி தீர்வு தொடர்பில் வாக்குறுதி தரவில்லை என்கின்றீர்கள். இலங்கையில் இதுவரையில் ஆட்சி புரிந்த சிங்கள அரசியல் தலைவர்கள் எமக்கு வாக்களியுங்கள் 13 பிளஸ் தருகின்றோம், சமஷ்டியை தருகின்றோம் என்று கூறி தமிழ் அரசியல் கட்சிகளையும் தமிழ் மக்களையும் ஏமாற்றியதைப் போன்று ஜே.வி.பி. தலைவரான அநுர குமார திஸாநாயக்கவும் உங்களையும் தமிழ் மக்களையும் இந்த வாக்குறுதியைத் தந்து ஏமாற்ற வேண்டுமென எதிர்பார்க்கின்றீர்களா?

13ஆவது திருத்தம் அல்லது சமஷ்டி முறையிலான தீர்வு குறித்து தமிழ் மக்களுக்கு இதுவரை உத்தரவாதம் தந்த மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இன்று வரை அந்த வாக்குறுதியை நிறைவேற்றினார்களா? மைத்திரி, ரணிலின் வாக்குறுதியை நம்பி அவர்களுக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களை கோரிய நீங்கள் மீண்டும் அவ்வாறான வாக்குறுதியை கோருவது மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றவா? அல்லது நீங்களும் சேர்ந்து ஏமாறவா?

வடக்கு, கிழக்கு இணைப்பை பிரிப்பதில் ஜே.வி.பி. முன்னின்று செயற்பட்டதாக நீங்கள் குற்றம்சாட்டுவது உண்மைதான். ஆனால் அந்த வடக்கு,கிழக்கு இணைப்பின் பிதாமகனான இந்தியா நினைத்திருந்தால் வடக்கு,கிழக்கு பிரிக்கப்பட்டதை தடுத்திருக்க முடியும். ஆனால் வடக்கு, கிழக்கு பிரிப்பு உள்நாட்டு விவகாரம் என இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தையே செல்லாக்காசாக்கி விட்டு மௌனம் காத்த இந்தியாவை இன்று வரை நம்பும் நீங்கள், இந்தியாவை குற்றம்சாட்டாத நீங்கள் வடக்கு, கிழக்கை தனது அரசியல் ஆதாயத்துக்காக பிரிக்கஒரு வழக்கு போட்ட ஜே .வி.பி.யை குற்றம் சாட்டத் தகுதியுடையவர்களா?

யுத்தம் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் சுமார் 40,000 இராணுவ வீரர்களை இணைத்தனர். யுத்தத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டபோது அதுகுறித்து குறைந்தபட்சம் அனுதாபம் கூடதெரிவிக் கவில்லை என குற்றம்சாட்டும் நீங்கள் இறுதி யுத்தத்தை வன்னியில் நின்று தலைமையேற்று நடத்தி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கு காரணமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்டபோது அவருக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தமிழ் மக்களை கோரியதுடன் நீங்களும் ஆதரவாக வாக்களித்தமை எந்த வகையில் நியாயம்? நீங்கள் செய்ததை விடவும் ஜே.வி.பி. செய்தது பெரும் குற்றமா?

வட, கிழக்கு மாகாணங்களில் பௌத்த பிக்குகளின் பங்கேற்புடன் இடம்பெற்றுவரும் அத்துமீறல்கள் தொடர்பில் அநுரகுமார திசாநாயக்க ஒருமுறைகூட கண்டனத்தை வெளிப்படுத்தவில்லை என்கின்றீர்கள். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில்தான் இது தீவிரம் பெற்றுள்ளது. அவர் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் அவரைத்தானே உங்கள் கட்சிகள் ஆதரிக்கப் போகின்றன. அமைச்சுப்பதவி பெறப்போகின்றீர்கள். அல்லது வட, கிழக்கு மாகாணங்களில் பௌத்த பிக்குகளின் பங்கேற்புடன் இடம்பெற்றுவரும் அத்துமீறல்கள் தொடர்பில் இதுவரையில் வாய் திறக்காத சஜித் பிரேமதாசவைத்தானே ஆதரிக்கபோகின்றீர்கள்? ஏனெனில் நீங்கள் தான் தமிழ் பொது வேட்பாளரை ஏற்க முடியாதென ஏற்கனவே அறிவித்து விட்டீர்களே?

அனைவரும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணைய வேண்டும் புதிய பாதைக்கு செல்ல வேண்டும் என ஜே.வி.பியினர் கூறுவது ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழ் வாக்கு வங்கியை இலக்குவைத்தே என்பது புலனாகின்றது என்று கூறுகின்றீர்கள். நீங்களும் அநுரகுமாரவின் உரையை எதிர்ப்பது, விமர்சிப்பது பாராளுமன்றத்துக்கான தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்துத்தானே?

இந்தியாவுக்கு சென்றிருந்த ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசநாயக்க, வடக்கு மீனவர் பிரச்சினை தொடர்பாகவோ எல்லை தாண்டும் இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்துமீறல் தொடர்பாகவோ அங்கு பேசியிருக்கவில்லை என்கின்றீ ர்கள்.தமிழ் மக்களின் பிரதிநிதியான கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மீனவர் பிரச்சினை தொடர்பாகவோ எல்லை தாண்டும் இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்துமீறல் தொடர்பாகவோ என்னத்தை வெட்டிக்கிழித்தார்?

எனவே எமக்கு வாக்களியுங்கள் என்றோ, 13 பிளஸ் தருகின்றோம் வாக்களியுங்கள் என்றோ சமஷ்டியை தருகின்றோம் வாக்களியுங்கள் என்றோ கூறுவதற்காக நாங்கள் இங்கு வரவில்லை என உண்மையைக்கூறி தமிழ் மக்களுக்கு ஆட்சியின் பங்கு தருகின்றோம் எனக்கூறும் அநுர குமார திசாநாயக்கவை விமர்சிக்கும், குற்றம்சாட்டும் உரித்து, அருகதை எந்தவொரு தமிழ் கட்சிகளுக்கும் கிடையாது. ஏனெனில் நீங்களும் 13 ஆவது திருத்தம், சமஸ்டியை வைத்துத்தான் அரசியல் செய்கின்றீர்கள்.

## கடந்தவையும் கடப்பவையும் – (94)

*கனநேரக்காத்திருப்பு என்பதாலோ அன்றுமட்டும் - இரவு
மிகநீளமாய் இருந்தது எங்களுக்கு*

*அதிகாலையானதும் வேறு வள்ளம் வருமென்றும்
பெரிதாக யோசிக்க ஏதுமிங்கு இல்லையென்றும்*

*கடலோடி அனுபவம் வாய்ந்தவர்கள் சொல்கிறார்கள் - ஆயினும்
கரையன்றி நடுக்கடலில் நின்றறியா எங்களுக்கு*

*நடக்குமோ அதுவென்ற ஏக்கம் ஒருபுறமும்
நடுக்கடலில் மாறுவதில் தயக்கம் ஒருபுறமும்*

*இருக்கவே செய்தது என்றபோதும் சிரித்துக்கொண்டே
வருத்தப்படா மக்கள்போல் நடித்துக்கொண்டோம் - அங்கு*

*மனவுறுதிகொண்ட பெரியவர்கள் இருந்ததனால்
விடலில்லை அதிகளவில் மனம் சோந்துபோக - ஆனாலும்*

*அவனும்தான் விடவில்லை தன்தொழிலை - பொழுது
புலரும்முன் விடமாட்டேன்நான் என்பதுபோல்*

*பேரிரைச்சலுடன் கிளம்பிவிட்டான் விமானக்குண்டுகளை
அதிகாலைக்குள் இறக்கிவிட்டுப் போவதற்கு*

*தூரத்து இரைச்சல் கிட்டவாய் கேட்கும் போதே - கடைசி
நேரத்து இறைஞ்சுதல்கள் மட்டுமே கேட்குறது காதுகளுள்*

*காதுகளைப் பொத்திக்கொண்டும் கண்களை மூடுக்கொண்டும்
'பாதுகார்' என்பதுவே பொது வேதமாய் இருந்ததப்போ*

*வேகமாய் வந்த இரண்டும் தாண்டி தூரமாய் போனபோதே - இனி
சாகவே மாட்டோம் என்பதுபோல் ஒரு உணர்வு - உண்மையில்*

*கடவுள் என்றொரு காவலன் இருக்கிறான் என்பதை - மிக
அழுத்தமாக உணர்ந்த தருணம் அது*

*பொழுது புலர திறந்தவெளி நீர்ப்பரப்பில் - தூரத்தே
தெரிகிறது சின்னதாக ஏதோ ஒன்று - அது*

*மெள்ள மெள்ள முழுமையாக வெளிப்படவே - தனி
வள்ளமல்ல தொடர் வள்ளங்கள் என்பதுவும் புரிந்தது*

*ஒவ்வொன்றிலும் மக்களும் அவர்தம் பொருள்களும்
எவ்வாறெனினும் மக்களைக் காண்பதில் பெருமகிழச்சி*

*பெரும் எஞ்சின்கள் பூட்டிய பெரிய வள்ளம் இழுத்துவர
தொடர்ச்சியாக வருகின்றன வள்ளங்கள்*

*இப்படியும் இழுத்துவர முடியுமா தொடர்ச்சியாக?
எப்பொழுதும் காணாத அதிசயம் அது*

*ஒன்று இரண்டு என எண்ணுவோர்க்கு முன்னால்
நின்றுகொண்டது இருபத்தோராம் வள்ளம் - ஒருவருடன்.*

*தொடுத்து வந்த அத்தனையும் காத்துநிற்க - கவனமாய்
எடுத்துவைக்கும் பொருட்கள்போல பக்குவமாம்*

*இறக்குகிறார் ஒருவர்பின் ஒருவராக எல்லோரையும் - பின்
கனக்கவாய் இருந்த மிதிஉந்துகளும் உடைமைகளும்*

*இறக்கியபின் பாச்சில் அவர்களில் இருவர்மட்டும்
இறங்காமல் அங்கிருக்க மெதுவாக நகர்ந்தன வள்ளங்கள்*

*தொடருந்துப் பயணம்போல திறந்தவெளிக் கடலில்
தொடர்ந்த பெரும் பயணமதில் இடையிடையே*

*திகிலூட்டும் பல பொருட்கள் தண்ணீரில்
தாறுமாறாய் மிதந்துவர பயமடைந்தோம் - அங்கு*

*தொப்பிகள் செருப்புகள் துணிகள் என
தெப்பமாய் மிதந்து வர - இவை*

*எப்படி வந்தன என ஆய்வுகளும் அலசல்களும்
கண்டபடி நடந்தபோது கூட வந்தவர் சொல்கிறார்*

*'நேற்று நடந்த தாக்குதலில் இறந்தவரின் உடைமைகள்' - அதை
கேட்டதுதான் 'பார்க்காதே அங்கே' என*

*கண்களைப் பொத்துகிறாள் தங்கையவள்
கண்களை மூடியும் திறந்தும் சென்றவாறு*

*வந்துசேர்ந்தோம் ஒருவாறு அக்கரையாகிய 'நல்லூர்'
கரைக்கு...*

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# கனடாவில் சூரியனைத் தேடிய பயணம் பகலில் சில செக்கன்கள் சூழ்ந்த இருள்

- குரு அரவிந்தன்

கனடா நாட்டிலே பனிக்காலத்தில் சூரியனைக் காண்பது என்பது அரிதாகவே இருக்கும். வெளியே வெய்யில் எறிப்பது போல இருந்தாலும், வெளியே சென்றால் சில சமயம் கடும் குளிராகவும் இருக்கும். காலநிலை காரணமாக இம்முறை கனடாவில் பனி கொட்டுவது மிகக் குறைவாகவே இருந்தது. வழமைபோல ஆய்வாளர்கள் பல காரணங்கள் சொன்னாலும், இந்த மாற்றத்திற்கு எல்நினோ (El Nino) என்ற பசுபிக்சமுத்திர நீரோட்டமும் இம்முறை ஒரு காரணமாக இருந்தது. சில வருடங்களுக்கு ஒரு முறை டிசெம்பர் மாதத்தில் எல்நினோவின் இதுபோன்ற பாதிப்பை எங்களால் இங்கே அவதானிக்க முடிகிறது.





ஏப்ரல் 8 ஆம் திகதி சூரிய கிரகணம் நடக்கப் போவதாகவும், வட அமெரிக்காவில் அதை முழுமையாகப் பார்க்க முடியும் என்றும் ஊடகங்கள் பல செய்திகளை வெளியிட்டிருந்தன. சூரிய கிரகணம் என்பது எப்போதாவது நடக்கும் ஒரு சிறப்பு வானியல் நிகழ்வாக இருக்கின்றது. சில சமயங்களில் சந்திரன், பூமி, சூரியன் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது இத்தகைய நிலை ஏற்படுகின்றது. முக்கிமாக சூரியன் மற்றும் பூமிக்கு இடையே ஒரே நேர்கோட்டில் சந்திரன் வரும்போது சூரிய கிரகணமும், இவற்றுக்கு நடுவே ஒரே நேர்க் கோட்டில் பூமி வரும்போது சந்திர கிரகணமும் ஏற்படுகிறது.

அனேகமான கனடியர்கள் போலவே நாங்களும் இதற்கான ஆயத்தங்களைச் செய்திருந்தோம். சூரியனைப் பார்ப்பதற்கான விசேட கண்ணாடி, நிகழ்வைப் படம் பிடிப்பதற்கான கமெரா எல்லாம் தயாராக வைத்திருந்தோம். நாயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதிதான் இதற்குச் சிறந்த இடம் என்று ஊடகங்கள் தெரிவித்திருந்தன. பிள்ளைகளும் எங்களுடன் வந்ததால், நாங்களும் அங்குதான் போவதாக இருந்தோம். அதே நேரம் கூட்டத்தைச் சமாளிக்க அனேகமான வீதிகளின் போக்குவரத்தைத் தற்காலிகமாக மூடப்போவதாக நயாகரா பொலீஸார் அறிவித்திருந்தார்கள்.

பிள்ளைகள் பாடசாலையால் திரும்பி வீட்டுக்குப் போகும் நேரம்தான் இங்கே கிரகணம் என்பதால், அவர்கள் அதற்கான கண்ணாடி இல்லாமல் நேரடியாகப் பார்த்து விடுவார்கள் என்ற பயம் காரணமாக முன் எச்சரிக் கையோடு அன்று பாடசாலைகள் முடப்பட்டிருந்தன.

எதிர்பாராத விதமாக அன்று ரொறன்ரோ கருமேகத்தால் மூடப்பட்டிருந்தது. நயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதியிலும் முகிற் கூட்டங்கள் நிறைந்திருப்பதாகவும், தெளிவாகப் பார்க்க முடியாமல் போகலாம் என்ற செய்தியும் வந்தது. எனவே நாங்கள் பயணத்தின் திசையை மாற்றியிருந்தோம். தெற்கு நோக்கிப் போகாமல் மேற்கு நோக்கிக் ஹமில்டன் பகுதிக்குச் சென்றோம். அங்கே வானம் தெளிவாக இருந்தது, ஆனால் ஒரு நிமிடமும் 50 விநாடிகளும்தான் இதைப் பார்க்க முடியம் என்பது தெரிய வந்தது. எனவே அங்கிருந்து இன்னும் சற்று தெற்கே உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றோம், அங்கே வீதி ஓரங்களில் வண்டிகளை விட்டுவிட்டு மக்கள் கண்ணாடிகளோடும், கமெராக்களோடும் நிறைந்திருந்தார்கள். அங்கு வானம் இன்னும் தெளிவாக இருந்ததால், சுமார் இரண்டு நிமிடங்கள் வரை முழுக்கிரகணத்தையும் எங்களால் பார்க்கக்கூடியதாக இருந்தது.

சுமார் 3:15 மணியளவில் சந்திரன் சூரியனை மறைக்கத் தொடங்கியது. முழுக்கிரகணம் வந்தபோது தெற்கே வானம் அரேஞ்ச் நிறமாக மாறியிருந்தது. தெரு விளக்குகள் சட்டென்று எரியத் தொடங்கின. காரணம் இருட்டினால் தானியங்கியாகவே எரியக்கூடிய தெருவிளக்குள் என்பதுதான் காரணம். திகைப்படைந்த பறவைகள் எல்லாம் கூடு நோக்கிப் பறக்கத் தொடங்கியிருந்தன. எல்லோரும் கண்ணாடியை எடுத்துவிட்டு, வெள்ளி மோதிரம் போலத் தெரிந்த சூரியனை நேரடியாகவே பார்த்தார்கள். எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது, எங்கள் வாழ்நாளில் பூமியில் இருந்து சூரியனை வெறுங்கண்ணால் நேரடியாகப் பார்க்கலாம் என்று நினைத்தும் பார்த்திருக்க மாட்டோம். அப்படி ஒரு சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்தது.

வண்டியில் போகும் போது இதைப் பற்றி உரையாடிக் கொண்டு சென்றோம். அப்போது ஆறு வயதுடைய ஒரு பிள்ளை "சந்திரன் இரவில்தானே வரும், இன்று மட்டும் என் பகலில் வருகின்றது" என்று கேட்டது. அறிவியல் சார்ந்த கேள்வி என்பதால், "சந்திரன் பகலிலும் வருகிறது, ஆனால் பகலில் சூரிய வெளிச்சத்தால் அது மறைக்கப்பட்டு விடுகின்றது" என்று விளக்கம் கொடுத்தேன்.

1972 ஆம் ஆண்டு இதேபோல கிரகணம் நடந்தது, இனி 80 வருடங்களின்பின், அதாவது 2106 ஆம் ஆண்டுதான் இதே போன்ற முழுகிரகணத்தைப் பார்க்க முடியும். ஒரே ஒரு குறை என்னவென்றால், அடுத்த தலைமுறைக்குத்தான் இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது. அடுத்த தலைமுறையினர் இந்தப் பேப்பர் கட்டிங்கைக் கவனமாகப் பாதுகாத்தால், ஒரு காலத்தில் "என்னுடைய பூட்டன் முழுக்கிரகணத்தையும் நேரடியாகப் பார்த்திருக்கிறார்" என்றாவது அவர்கள் பெருமையுடன் பீற்றிக் கொள்ளலாம்.







# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1095



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கங்குவேலி சிவன்கோவில்

### மூதூர், திருகோணமலை

*“ஊனாகி உயிராகி அதனுள் நின்ற*
*உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்*
*நானேதும் அறியாமே என்னுள் வந்து*
*நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்*
*தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்*
*திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்*
*ஆனாய் உன் பொற்பாதம் அடையப் பெற்றால்*
*ஆல்ல கண்டம் கொண்டடியேன் என்செய்கேனே”*

கங்குவேலியில் தற்போது காணப்படும் சிவன்கோயில், கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. கருவறையில் அங்குஷ்டப் பிரமாணமுள்ள (பெருவிரல் - The thumb) சிவலிங்கமொன்று நிறுவப்பட்டுள்ளது. பிள்ளையார், முருகன், சந்திரசேகரர், அம்பாள், அஸ்திரதேவர், ஆகிய தாமிரத் திருவுருவங்களும், சிலையினாலான அட்டதிக்குப் பாலகருக்குரிய பலிபீடங்கள் எட்டும், நாகதம்பிரானும், அர்த்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பலிபீடங்கள் எட்டும், அழிந்துபோன சிவன்கோவிலுக்குரியதெனக் கூறுவர். அஸ்திரதேவர் அகத்தியர் ஸ்தாபனத்திருந்து கொண்டுவரப்பட்டுள்ளதென்பர். ஆழிந்துபோன திருமங்கலாய் சிவன்கோவிலில் இருந்த கோயில்மணியொன்றும் இவ்வாலயத்திலே வைக்கப்பட்டுள்ளது. கோவில் மணியிலே பின்வரும் வாசகம் காணப்படுகின்றது. “திருமங்கலாய் கோயிலுக்கு அவ்வூரிலேயிருக்கும் பத்திப்போடி மகன் பத்தனுடைய உபயம்” எனக் கூறப்பட்டுள்ளது.

கங்குவேலி சிவன்கோயிலிலுள்ள சுவாமி பெயர் கமலேஸ்வரன். அம்பாள் பெயர் கமலேஸ்வரி என்பதாகும். இவ்வாலயத்திலே தினமொரு பூசை நடைபெறும்.

தற்பொழுது போர்மேகம் சூழ்ந்த பிரதேசமாகக் காணப்படுகின்றபோதிலும், அமைதியான காலங்களிலே இங்கு வாழ்ந்த மக்கள் விழாக்களை மிக விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம். சிவராத்திரி, கௌரிநோன்பு, திருவெம்பாவை, முதலியன விசேட வழிபாடுகளுடன் மிகச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். ஆடி அமாவாசைக்கு அம்பாள் சமேதரராக சிவபெருமான் அகத்தியர் ஸ்தாபனத்திற்கு அருகிலுள்ள மகாவலி கங்கைக்கு தீர்த்தமாடச் செல்லும் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். அயல் கிராமங்களிலுள்ள மக்கள் இவ்விழாவுக்காக வந்து கூடுவர். முதல் நாளிரவு தீர்த்தக்கரையில் சமய. கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும். அன்று இரவு முழுவதும் திருக்கரசைப் புராணம் படித்துப் பயன்சொல்லி நிறைவு செய்வார்கள்.

புராணங்களாயினும் சரி ஏனைய நூல்களாயினும் சரி அவை எழுந்த சமகால வாழ்வியல் விபரங்களைக் குறிப்பிடுவதோடு, புராணங்கள் எழுதப்பட்ட பிரதேச கலை, கலாச்சாரம், வரலாறு, சமயம், மரபு ஆகியவற்றிற்கும் முதலிடம் கொடுத்தே எழுதப்படுவது வழக்கமாகும். கங்குவேலிக்கிராமத்தின் சிறப்பு, வனப்பு, ஆகியவற்றை திருக்கரசைப் புராணத்தின் ஒரு பாடல் மூலம் அறியலாம்.

*“காடெல்லாம் களி நல்யானை கரையெல்லாம் பவளக்குப்பை*
*நாடெல்லா மிரத்தினராசி நகரெல்லாம் நல்லோர் சங்கம்*
*வீடெல்லாஞ் செம்பொற்கூரை வெளியெலாஞ் செந்நெற்குன்றம்*
*கோடெலாம் மஞ்சையீட்டம் குழியெலாம் கழுநீர்ப்போது”*

என்று அன்றைய ஊரின் சிறப்பையும், மக்களின் வாழ்க்கை முறையும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

திருக்கரைசைப் புராணமும் இந்த வரைமுறைகளைக் கருவாகக் கொண்டே இயற்றப்பட்டுள்ளது. சித்தாந்த சாத்திரம் பதினான்கு. அதில் எட்டு நூல்களை எழுதியவர் உமாபதி சிவாச்சாரியார். இவரது சீடர்களில் ஒருவராலேயே திருக்கரசைப் புராணம் எழுதப்பட்டது. அச்சியந்திரயம் பயன்படுத்தப்படாத காலத்திலே ஏட்டுச்சுவடிகளிலேயே புராணங்கள் எழுதப்பட்டன. திருக்கரசைப்புராண ஏடுகளை ஒன்று சேர்த்து, சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவரின் பொழிப்புரையுடன், திருகோணமலைத் தமிழறிஞர் வே. அகிலேசபிள்ளை அவர்களால், மயிலட்டி அச்சியந்திரசாலையில், விகிர்த்தி வருடம் ஆனிமாதம் 1890 ஆம் ஆண்டு, முதலாவது பிரசுரம் பதிப்பிக்கப்பட்டது. இரண்டாம் பிரசுரம், திருகோணமலையில் நந்தனவருடம் ஆடிமாதம் 1952 ஆம் வருடம் அச்சிடப்பட்டது. 1975 ஆம் ஆண்டு கட்டைபறிச்சான் இந்து இளைஞர்மன்றம். திரு. வ. அ. இராசரத்தினம் அவர்களின் மேற்பார்வையில் ஒரு பதிப்பினை வெளியிட்டது. இவ்வாறான நூல்களைப்பேணிப் பாதுகாப்பது, சரித்திர வரலாற்று நிகழ்வுகளை மீளநோக்கும்போது பல தெளிவுகளை ஏற்படுத்தப் பேருதவியாக அமையும்.

இத்தகைய சிறப்புமிகு திருக்கரசைப்புராணம், ஆடி அமாவாசைக்கு முதல்நாள் இரவு படித்து உரை சொல்வர். திருக்கரைசைப் புராணபடனத்தைத் தொடர்ந்து அடுத்தநாள் உதயத்தில், தீமிதிப்பு வைபவம் நிகழும். இதனைத் தொடர்ந்து சுவாமி தீர்த்தமாடுவார். இத்தினத்திலே மகாவலிகங்கைக்காடு, அமாவாசை தினமாக இருந்தபோதிலும், பௌர்ணமி தினம்போலக் காட்சியளிக்கும். சுவாமி தீர்த்தமாடிவரும்பொழுது, ஆலயவாசலிலுள்ள வைரவருக்கு உருண்டைச் சோறிடுதல் என்னும் வழிபாடு நடைபெறுகின்றது. பிறர் கண்படாமல் பாகம்பண்ணிய மூன்று பெரிய சோற்று உருண்டைகளை வைரவருக்குப் படைத்துப் பூசை செய்வார்கள். பண்டைய வழக்கப்படி வைரவருக்கு நடைபெறும் இந்தப்பூசை வருடத்திலே ஒருமுறையே நடைபெறும்.

இப்பிரதேச இளைஞர்கள் பலர் ஆர்வத்தோடு பரிபாலனசபை அமைத்து செயற்பட்டு வருகின்றார்கள். யுத்தபூமியான இப்பிரதேசத்தில் ஆலயங்கள், அல்லலுறும் மக்களுக்கு ஆறுதலளிப்பதோடு, இடம்பெயரும் மக்களுக்கு அபயமளிக்கும் இடமாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. தொடரும் யுத்தநிலை காரணமாகத் தமிழர்களின் கலாச்சாரச்சின்னமான ஆலயங்கள், அழித்தொழிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறான ஆலயங்களைப் பேணிப்பாதுகாப்பது அனைவரின் தலையாய கடமையாகும்.

*வளரும்...*



ॐ OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**12-04-2024 வெள்ளி தொடக்கம் 18-04-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** மாற்றுச் சிந்தனைக் உதயமாகும் வாரம். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மனை வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. ஆபரணச்சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். வீண் வம்புகள் அகலும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். பணியாளர் ஒத்துமைப்பு கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. உதவிகள் கிடைக்கும். கல்வியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். புதிய முதலீடு உருவாகும். பகையாளிகளின் நிலை மாறும். முன்னேற்றம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கற்பனை வளம் அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். திருப்தி ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நட்சத்திர தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**ரிஷபம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். சேமிப்பு வளரும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். தொழில் லாபம் உண்டு. தொட்ட காரியம் ஜெயமாகும். சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். பேச்சில் நிதானம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. நினைத்த விஷயம் நிறைவேறும். ஆபத்துக்கள் விலகும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பங்குச்சந்தையில் பலன் கிடைக்கும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். புதிய முயற்சி பலிதமாகும். ஊதிய உயர்வு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். வளமான சிந்தனை உருவாகும். கருத்து வேறுபாடுகள் விலகும். இடையூறு அகலும். வேதனைகள் சாதனைகள் ஆகும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். கடன் விஷயத்தில் கவனம் தேவை. திருமண பேச்சு முடிவிற்கு வரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். கலகலப்புக்கூடும். ஆசைகள் நிறைவேறும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**மிதுனம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். இனியத் தகவல் வந்து சேரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். சந்தோஷம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வழக்கமான பணியில் மாற்றம் வரும். சுபச்செய்தி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். வசந்தம் தேடி வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். எதிரிகள் தொல்லைகள் ஒழியும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முன்னேற்றமான காலம். நட்பு வட்டம் விரிவடையும். சுபச்செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. உடல் சோர்வு நீங்கும். திரு'டிகள் விலகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். மனமகிழ்ச்சி கிட்டும். எண்ணங்கள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,G




**கடகம்:** ஆளுமைத்திறன் அதிகரிக்கும் வாரம். திருப்தி தரும் காலம். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிநதனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களால் நன்மை உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம். உதவும் குணம் அதிகரிக்கும். பிரச்சனைகள் விடுபடும். பதவி உயர்வு ஏற்படும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். இடையூறுகள் அகலும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத்தேவை அதிகரிக்கும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். விபரீத எண்ணம் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உள்ளம் மகிழும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசையார்வம் கூடும். பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். புதிய தொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். வாகன மாற்றம் நன்மை தரும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியைக் கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். ஆசைகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ராகு பகவான், அதிர்ஷ்ட எண்: 3,8,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,C



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**"ஜோதிட மகரிஷி"**
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். வியாபாரம் சிறக்கும். விரயம் குறையும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் கவனம் தேவை. களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். திடீர் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் வளர்ச்சி கூடும். முயற்சிகள் பலிதமாகும். பெற்றோர்களால் பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். சாதனையை சந்திப்பீர்கள். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். அரசியல் ஆர்வம் ஏற்படும். விரயங்கள் அதிகரிக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உற்சாகம் களை கட்டும். உயர் பதவி யோகமுண்டு. தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்ல செய்திகள் நாடி வரும். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆழமான மேன்மைகள் அமையும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். பாக்கிகள் வசூலாகும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். முயற்சிகளில் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். ரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கலனம் தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்லச் செய்தி நாடி வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,6,9,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**கன்னி:** மேன்மைகள் சந்திக்கும் வாரம். தடைகள் விலகும். பணியில் பாராட்டு கிடைக்கும். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் அதிகரிக்கும். மனநிம்மதி குறையும். தனசேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலை பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். தனலாபம் பெருகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். உடல்பொலிவு கூடும். முதலீடு தவிர்க்கவும். வரவு திருப்தி தரும். வழக்குகள் தாமதமாகும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் கிடைக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். மதிநுட்பம் தேவை. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. பிள்ளைகள் கல்வி மேம்படும். பதவி உயர்வு தாமதமாகும். செய்த்தொழிலில் கவனம் தேவை. மற்றவர்களால் தொல்லை உண்டு. மனைவியால் நன்மை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். காரியம் வெற்றி பெறும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**துலாம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். பொன்னான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். நினைத்த விஷயம் நிறைவேறும். பணமுயற்சி பலன் தரும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். ஊக்கம் அதிகரிக்கும். சிக்கனம் தேவை. கல்வியில் மேன்மை உண்டு. கடன் வசூலாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சீறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். குடும்ப ஒற்றுமை மேம்படும். பொருளாதாரம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. வியாபாரம் விருத்தியாகும். வெளியூர் பயணம் உண்டு. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உடல்நலம் சிறக்கும். தேகப்பலன் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். பணவரவு திருப்தி தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. வாழ்த்துக்கள் வந்து சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காமதேனு, அதிர்ஷ்ட எண்: 4,7,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q




**விருச்சிகம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்தி வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நாட்டம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வாகன மாற்றம் உண்டு. பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பொறாமைகள் விலகும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பொது வாழ்வில் புகழ் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். வீண்செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தான தர்மங்கள் பலன் தரும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகளின் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. குதூகலம் தாண்டவமாடும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,2,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X

*(தொடர்ச்சி 26 பக்கம்)*

# அன்பின் தொனி - 726

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**தேவகிருபை -** Grace of God

**அவன் தாய் அவனுக்குப் போதித்த உபதேசமாவது**

ராஜாவாகிய லேமுவேலுக்கடுத்த வசனங்கள்; அவன் தாய் அவனுக்குப் போதித்த உபதேச மாவது: என் மகனே, என் கர்ப்பத்தின் குமாரனே, என் பொருத்தனைகளின் புத்திரனே, ஸ்திரீகளுக்கு உன் பெலனையும், ராஜாக்களைக் கெடுக்கும் காரியங்களுக்கு உன் வழிகளையும் கொடாதே. திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; லேமுவேலே, அது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல. மதுபானம்பண்ணினால் அவர்கள் நியாயப்பிரமாணத்தை மறந்து, சிறுமைப்படுகிறவர்களுடைய நியாயத்தையும் புரட்டுவார்கள். மடிந்துபோகிறவனுக்கு மதுபானத்தையும், மனங்கசந்தவர்களுக்குத் திராட்சரசத்தையும் கொடுங்கள்; அவன் குடித்துத் தன் குறைவை மறந்து, தன் வருத்தத்தை அப்புறம் நினையாதிருக்கட்டும். ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத்திற. உன் வாயைத்திறந்து, நீதியாய் நியாயந்தீர்த்து, சிறுமையும் எளி மையுமானவனுக்கு நியாயஞ்செய். குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடையவிலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக்குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள். ஆட்டுமயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலைசெய்கிறாள். அவள் வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டுவருகிறாள். இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட் சத்தோட்டத்தை நாட்டுகிறாள். தன்னைப் பெலத்தால் இடைக்கட்டிக்கொண்டு, தன் கைகளைப் பலப்படுத்துகிறாள்.

**- நீதிமொழிகள் 31: 1- 17**

**ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்**

தன் வியாபாரம் பிரயோஜனமுள்ளதென்று அறிந்திருக்கிறாள்; இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும். தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள்; அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும். சிறுமையானவர்களுக்குத் தன் கையைத்திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள். தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்பிருக்கிறதால், தன் வீட்டா ரினிமித்தம் குளிருக்குப் பயப்படாள். இரத்தினக் கம்பளங்களைத் தனக்கு உண்டுபண்ணு கிறாள்; மெல்லியபுடவையும் இரத்தாம்பரமும் அவள் உடுப்பு. அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாயிருக்கிறான். மெல்லிய புடவைகளை உண்டுபண்ணி விற்கிறாள்; கச்சைகளை வர்த்தகரிடத்தில் ஒப்பு விக்கிறாள். அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது; வருங்காலத்தைப்பற்றியும் மகிழுகிறாள். தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவி ன்மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது; என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப் பார்த்து: அநேகம் பெண்கள் குணசாலி களாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான். சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.

**- நீதிமொழிகள் 31: 18-30**

**தொடரும்...**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# நிந்தவூரில் பஸ்வண்டி மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழப்பு

**கனகராசா சரவணன்**

அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியிலுள்ள நிந்தவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மாட்டுபாளையம் பகுதியில் பஸ்வண்டியுடன் மோட்டர்சைக்கிள் ஒன்று மேதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை (06) பகல் இடம்பெற்றுள்ளதாகவும் பஸ்வண்டி சாரதியை கைது செய்துள்ளதாக நிந்தவூர் பொலிசார் தெரிவித்தனர்.

நிந்தவூர் 5ம் பிரிவைச் சேர்ந்த 72 வயதுடைய அகமட் லெப்பை மீராலெப்பை என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொத்துவில் இருந்து கல்முனை நோக்கி பிரயாணித்த தனியார் பஸ்வண்டி நிந்தவூர் மாட்டுபாளையம் சந்திக்கு அருகில் சம்பவதினமான பகல் 11.30 மணியளவில் அதே திசையில் பிரயாணித்த மோட்டர் சைக்கிள் வீத-ியின் வலது பக்கும் திரும்பிய நிலையில் பின்னால் வந்த பஸ்வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டர் சைக்கிளை செலுத்திச் சென்ற வயோதிர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நிந்தவூர் வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகவும் பஸ்வண்டி சாரதியை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் போக்குவரத்து பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

*(11 பக்கத் தொடர்ச்சி)*

# ருவாண்டா (1994) ... இலங்கை (2009) ... காசா (2024) ...

***(இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனின் சிறப்புத் தொடர்)*** (பகுதி - 1)

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

அப்போது ஆட்சியில் இருந்த ஹுட்டு அதிகார அரசை பிரான்ஸ் ஆதரித்திருந்தது என்பது இங்கு நினைவுகூற தக்கது.

ருவாண்டா மற்றும் புருண்டி அதிபர்கள் பயணித்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து, டுட்ஸி மக்களுக்கு எதிராக தீவிரமான விஷமத்தனமான பிரச்சாரம் அரசின் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் முன்னெடுக்கப்பட்டது. அது வன்முறையை மேலும் தூண்டியது.

நூறு நாட்கள் அரங்கேறிய வன்செயலில் குறைந்தது 250,000 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர் என்று ஐ நாவின் தரவுகள் கூறுகின்றன.

அவ்வகையில் சொல்லொணா துன்பங்களுக்கு ஆளானவர்கள் இன்றளவும் அதிலிருந்து மீள முடியாமல் உள்ளனர். அதேவேளை இனியும் இனப்படுகொலைகள் இடம்பெறக் கூடாது என்ற நோக்கில் சில நடவடிக்கைகள் ருவாண்டாவில் எடுக்கப்பட்டுள்ளன.

இன்று ருவாண்டாவில் அந்த இனப்படுகொலையை நினைவுகூறும் வகையில் 200க்கும் மேற்பட்ட நினைவிடங்கள் உள்ளன. மேலும் தொடர்ச்சியாக மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

கடந்த 2002ஆம் ஆண்டு ஆண்டு ரூவாண்டா அரசு சமூக தீர்ப்பாயங்களை நியமித்தது. அங்கு இனப்படுகொலையை நிகழ்த்தியவர்கள் வந்து தமது வாக்குமூலங்களை பதிவு செய்தனர். அவற்றை பாதிப்புக்கு உள்ளானவர்கள் நேரடியாகக் கேட்டனர். அதன் மூலம் ஒரு இணக்கப்பாடு ஏற்படக் கூடும் என்ற நம்பிக்கை சிறிது துளிர்விட்டது. ஆனால், அதேவேளை அது நீதிபரிபாலன வழிமுறைகளுக்கு பாதகமாகவும் அமைந்தது.

பாதிக்கப்பட்டவர்களும், அவர்களுக்கு எதிரான அட்டூழியங்களைச் செய்தவர்கர்களும் நேருக்கு நேர் சந்தித்தாலும், அதன் மூலம் பொறுப்புக்கூறல் நீர்த்துபோய்விட்டது என்ற குற்றச்சாட்டும் விமர்சனமும் எழுந்தன. அதேவேளை, அது மன்னிப்பை கோருவதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது என்ற கருத்தும் நிலவியது.

இன்றைக்கு நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பான விடயங்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நிகழ்கால சந்ததியினர் தமது இனத்திற்கு இழைக்கப்பட்ட கொடூரங்களை அறிந்துகொள்ளவும், இனியும் அப்படியான ஒரு இனப்படுகொலை அரங்கேறாமல் இருப்பதை எப்படி தவிர்ப்பது என்பது குறித்து அறிந்துகொள்வதோடு, நல்லிணக்கத்தை முன்னெடுக்கவும் முயல்கிறார்கள்.

ஆனாலும், அந்த இனப்படுகொலையை நிகழ்த்திய நூற்றுக்கணக்கானவர்கள் இன்னும் பல்வேறு நாடுகளில் வாழ்கின்றனர். எனினும் இதுவரை 28 பேர் மட்டுமே நாடுகடத்தப் பட்டுள்ளனர். இனப்படுகொலை புரிந்த குற்றச்சாட்டுக்கு ஆளான சந்தேக நபர்கள் மீது பிரான்ஸ் அரசு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தது. அவ்வகையில் ஆறு பேருக்கும் அதிகமானவர்களுக்கு தண்டனையும் அளிக்கப்பட்டது.

இவையெல்லாம் இடம்பெற்றாலும், ரூவாண்டா இனப்படுகொலைக்கு இன்னும் முழுமையான நீதி கிடைக்கவில்லை என்பதே உண்மை.

சரியாக 15 ஆண்டுகள் கழித்து...

**(தொடரும்...)**

# சித்திரைப் புதுவருடம்
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

*சித்திரைப் புதுவருடம் சிறப்பான நாளிது*
*புத்தரின் பக்தர்க்கும் புனிதத் தினமிது*
*மருத்துநீர் தலையிட்டு மகிழ்வொடு நீராடி*
*மருதடி விநாயகனை மனதால் வேண்டியே*
*புத்துடை அணிந்து பொலிவு பெற்றோம்*
*மத்தாப்பு கொளுத்தி மகிழ்வு கொண்டோம்*
*முற்றத்தில் கோலமிட்டு முறையாய்க் கும்பமிட் டோம்*
*பற்றொடு பொங்கியே பரமனுக்குப் படைத்தோம்*
*முக்கனி மலர்கள் முற்றிய இளநீரும்*
*பக்திப் பாடல்கள் பண்ணொடு பாடினோம்*
*பலகார வகையைப் பதமாய்ச் செய்தோம்*
*மலர்ந்த முகத்தொடு மக்களுக்குப் பகிர்ந்தோம்*
*பக்கத்து வீட்டுடன் பகிர்ந்து மகிழ்ந்தோம்*
*விக்கினம் இல்லா விருந்துண்டு களித்தோம்*
*பானம் அருந்திப் பரவசம் அடைந்தோம்*
*கானம் பாடியே கவலை மறந்தோம்*
*போட்டிகள் வைத்துப் போர்த்தேங்காய் அடித்தோம்*
*பாட்டிகள் மகிழப் பரிசுகள் கொடுத்தோம்*
*விளையாட்டுப் போட்டிகள் வீறுடன் செய்தோம்*
*சுளையாய்ப் பரிசுடன் சுகித்து நின்றோம்*
*சித்திரைப் புத்தாண்டு சிறப்பான தினமே!*
*வித்தகராய் நாமும் விளங்கி நிற்போமே.!*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

# இலண்டனில் "தமிழ் நிலைய மாலை"




இலண்டனில் இயங்கி வரும் தனித்துவமான பாடசாலைகளில் ஒன்றான இலண்டன் தமிழ் நிலையப் பாடசாலையின் வருடாந்த "தமிழ் நிலைய மாலை" நிகழ்வு 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை watersmeet theatre இல் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9.30 மணிக்கு இனிதே நிறைவேறியது.

மிகக் கச்சிதமான திட்டமிடலுடன் ஆரம்பமாகி நிகழ்வுகள் யாவும் தரமானதாக அமைந்து சபையோரை இரசிக்க வைத்தன. மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து பாடசாலைக் கீதம் இசைத்து நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தது பாராட்டுதற்குரியதாகும். வாத்தியக்கதம்பம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், சுரத்தட்டு, பரதநாட்டியம், கவிதாநிகழ்வு ஆகிய நிகழ்வுகள் பாடசாலை ஆசிரியர்களின் கடுமையான உழைப்புடன் மேடையேறின.





வீணை ஆசிரியைகளான ஸ்ரீமதி சிவதாரணி சகாதேவன், செல்வி ஜெசிக்கா நித்தியானந்தா, வாய்ப்பாட்டு ஆசிரியைகளான ஸ்ரீமதி சயனி தியாகநாதன், ஸ்ரீமதி ஜெயந்தி சுரேஸ், ஸ்ரீமதி திலகசக்தி ஆராவமுதன், மிருதங்க ஆசிரியர்களான ஸ்ரீ கிருபாகரன் பரமசாமி, ஸ்ரீ பார்த்தீபன் செல்வரட்ணம், வயலின் ஆசிரியையான ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கம், புல்லாங்குழல் ஆசிரியரான ஸ்ரீ ஜனகன் ஸ்ரீஸ்கந்தராஜா, சுரத்தட்டு ஆசிரியர்களான ஸ்ரீ ரெஜித்தன் சிவனேசன், ஸ்ரீ நிருஜன் சிவனேசன், பரதநாட்டிய ஆசிரியைகளான ஸ்ரீமதி திரிவேணி சங்கரகுமார், ஸ்ரீமதி பிரசாந்தி உதயபாபு ஆகியோரின் பங்களிப்பு மெச்சதற்குரியதாகும். மாணவர்கள் வழங்கிய தெய்வீக இசையும் நடனமும் பாடசாலையின் தரத்தையும் உயர்த்தியனவாக இருந்தன. நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பாடசாலை ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் பக்கவாத்தியக் கலைஞர்களாக விளங்கி ஒத்துழைப்பு வழங்கியமையும் மிகச் சிறப்பான அம்சமாக விளங்கியது.

கலாக்ஷேத்திராவில் கல்வி கற்ற ஆசிரியைகளால் கற்பிக்கப்படும் பரதநாட்டிய நிகழ்ச்சி எப்போதும் இலண்டன் தமிழ்ப் பாடசாலையில் தனித்துவமுடையதாக அமைந்திருக்கும். இம்முறையும் சீத்தா கல்யாணம் பொம்மலாட்ட நடன அமைப்பில் சிறுவர்களால் திறன்பட ஆடப்பட்டது. தொடர்ந்து சிரேக்ஷ்ட மணவர்களது பரதநாட்டியமும், அவர்களது நளினமும் அடவு முத்திரைகளும் சுத்தமானதாக இருந்து சபையைக் கவர்ந்தன. வாய்ப்பாட்டு ஆசிரியை ஸ்ரீமதி ஜெயந்தி சுரேஸின் வாய்ப்பாட்டு நிறைவு நிகழ்ச்சியாக அமைந்து நல்லதொரு மனவுணர்வைத் தந்தது.






தமிழ் மொழியின் புகழைச் சொல்லும் வகையில் "சித்திரம் பேசுதடி" கவிதா நிகழ்வு நகைச்சுவையுடன் சிந்திக்க வைத்ததாகவும் விளங்கியது. இதற்கான பிரதியை பாடசாலையின் பெற்றோரான கவிஞர் சு. திருப்பரங்குன்றன் எழுதியமையும் குறிப்பித்தக்க விடயமாகும். தமிழ் ஆசிரியைகளான ஸ்ரீமதி காஞ்சனா புவனேந்திரன், ஸ்ரீமதி ராதா நவனீதநாதன், ஸ்ரீமதி அகல்யா நித்தியலிங்கம், ஸ்ரீமதி மாதவி சிவலீலன் ஆகியோர் இதனை நெறிப்படுதியிருந்தனர்.

தலைமையாசிரியரான ஸ்ரீமதி மாதவி சிவலீலன் தனது உரையில் நுண்கலை ஆசிரியர்கள் இந்த வருடம் நவராத்திரி விழா, தியாகராஜ உற்சவம், தமிழ் நிலைய மாலை ஆகிய நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடாத்திப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளமையைக் குறிப்பிட்டு சிரந்தாழ்த்தி அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். அத்துடன் பாடசாலையின் முன்னைய தலைமை ஆசிரியர்களான கலாநிதி இ. நித்தியானந்தன், வைத்திய கலாநிதி வி. அனந்தசயனன் ஆகியோர் வருகை தந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணை நிற்பதனையும், அறங்காவல் சபையினரையும் பாடசாலை நிர்வாகத்தினரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்தார். நன்றியுரையினை செல்வி சித்தவி சபேசன் வழங்கினார். கலாநிதி பிரசாந்தி ஜெயராஜன் அனைத்து நிகழ்ச்சிகளையும் அழகாகத் தொகுத்து வழங்கினார். நிகழ்வுக்கு இளைஞர்களான சாள்ஸ், நிருக்ஷன், கரன் ஆகியோர் ஒலியமைப்பைத் திறன்படச் செய்து உதவியிருந்தனர். மேடை ஒழுங்கமைப்பை திரு. தி. திருமாறன், கலாநிதி சபேசன், ஸ்ரீமதி சிவாஜினி கிருக்ஷ்ணகுமார், ஸ்ரீமதி சிவாஜினி ஜெயந்தன், ஸ்ரீ எஸ். ஜனார்த்தனன், ஸ்ரீமதி நளாயினி சாந்தகுமார் ஆகியோரும் உணவுச் சாலையை ஸ்ரீ ஜெயந்தன் குழுவினரும் பொறுப்பேற்றுக் கொண்டமையால் நிகழ்வுகள் துரிதமாகவும் ஒழுங்காகவும் நடை பெறப் பெரிதும் காரணமாக அமைந்தன. விழாவுக்கான மலரினை ஸ்ரீ எஸ் ஜனார்த்தனன் அச்சிட்டு அனுசரணை வழங்கினார். மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்த இந்நிகழ்வு பெரு வெற்றியை அன்று கண்டிருந்தமை சபையோர் மத்தியில் மகிழ்ச்சியைத் தந்திருந்தது.





# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)





**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். லாபமான காலம். தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புதுமுயற்சிகளை தள்ளிப்போடவும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. பங்குச்சந்தையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். தேவைகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல் நலம் சீராகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நவதேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G




**மகரம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். தேவைகள் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெரும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். விரோதங்கள் விலகும். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித்தரும். மருத்துவச் செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் செலவுகள் அதிகமாகும். தாய்வழி தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன்சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் நிறைவேறும். வரன் வாயில் தேடி வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். வாழ்வில் வசந்தம் கூடும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. பிள்ளைகளால் தனவரவு உண்டு. இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வெகுமானம் கிடைக்கக்கூடிய காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெருமைமிக்க காலம். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். பெண்களால் பெருமை சேரும். அவமானங்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பணப்பற்றாக்குறை நீங்கும். கொண்டாட்டங்கள் கூடும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியல் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,E




**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். சாதகமான வாய்ப்பு அமையும். ஆண்களின் அதிகாரம் உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வரன் வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சினைகள் முடிவுக்கு வரும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**மீனம்:** சிறப்போடும், பொறுப்போடும் செயல்படும் வாரம். எண்ணங்கள் நிறைவேறும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புகள் அதிகமாகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். விவசாய பலன் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கிருபைகள் சேரும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. சுபிட்ஷம் பெருகும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். நெருக்கடிகள் குறையும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

# NESAN
*Subramaniam*

## 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயன் சர்வதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave,
Scarborough, ON M1S 4A4
26th May, 2024
Sunday,
at 6.00 PM

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1462 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 12, 2024

# "பிறப்புரிமையான சுதந்திரத்தை எவரும் எழுதித்தர வேண்டியதில்லை என்கிறார் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர்



சுதந்திரம் எங்களது பிறப்புரிமை. அதை இன்னொருவர் எமக்கு எழுதித் தரவேண்டிய அவசியமில்லை. அதை இன்னொருவர் பறிக்கவும் முடியாது என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "அரசறிவியலாளன் இதழ் 6" நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது...
(உள்ளே செய்தி 6ம் பக்கத்தில்)

# கனடாவின் புதிய மாத இதழான "தேசம்" பிரதிகள் மொன்றியாலில் பல பிரமுகர்களுக்கு வழங்கப்பெற்றன



கனடாவில் இயங்கிவரும் "தேசம்" பப்ளிகேசன்ஸ் நிறுவனம் வெளியிடத் தொடங்கியுள்ள புதிய மாத இதழான "தேசம்" பத்திரிகையின் பிரதிகள் ரொறன்ரோ மற்றும் மொன்றியால் மாநகரத்தில் உள்ள பல பிரமுகர்களின் கரங்களில் அண்மையில் வழங்கப்பெற்றன.

"தேசம்" பப்ளிகேசன்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகள் கடந்த சனிக்கிழமையன்று மொன்றியால் மாநகருக்கு விஜயம் செய்து அங்குள்ள சில முக்கிய பிரமுகர்களின் கரங்களில் "தேசம்" பத்திரிகையின் முதலாவது இதழின் பிரதிகளை வழங்கினார்கள்.
இங்கே காணப்படும் படங்களில் மொன்றியால் வர்த்தகப் பிரமுகர்கள் ஏஎம்ஆர் வர்த்தக நிறுவன அதிபர் ராஜ்கோபால் மற்றும் அவரது பாரியார். புருட் ஹபி நிறுவனத்தின் அதிபர் சாண் சிறி மற்றும் கோன்வோல் நண்பர் நந்தகுமார் . மொன்றியால் ஆத்மஜோதி நிலையத்தில் இடம்பெற்ற சிறிய வைபவத்தில் ரொறன்ரோ தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் ராஜரட்ணம். ஆத்மஜோதி நிலையத்தின் ஸ்தாபகர்கள் உதயகுமார் மற்றும் சசி அவர்களோடு மொன்றியால் வாழ் எழுத்தாளர் "வீணைமைந்தன்" சண்முகராஜா மற்றும் இசையாசிரியை செல்வமலர் உட்பட பலருக்கு "தேசம்" பத்திரிகை நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக முகாமையாளர் ராம்சங்கர் சிவநாதன் வழங்குவதை படங்களில் காணலாம்.

# திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் புத்தர் சிலை



திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுவந்த புத்தர்சிலை திறந்து வைக்கப்பட்டது.
திருகோணமலை சிவபுரி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மடத்தடி பகுதியில், வீரகத்தி பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான காணியில் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டுவந்த புத்தர்சிலை அவசர அவசரமாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அப்பகுதியில் வசிக்கும் சிறியளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இங்கே கடந்த 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் தமிழ் மக்களுடைய எதிர்ப்பையும் மீறி புத்தர்சிலை ஒன்று வைக்கப்பட்டது. இவ்விடத்திலேயே தற்போது பாரிய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு பெரிய அளவிலான புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளது.
(உள்ளே செய்தி 9ம் பக்கத்தில்)

# கனடாவில் புகழ்பெற்ற மூத்தோர் பாடல்போட்டி நிகழ்ச்சியான "சந்தியா ராகம் – 2024" இன் 4வது சுற்று



கனடாவில் புகழ்பெற்ற மூத்தோர் பாடல்போட்டி நிகழ்ச்சியான "சந்தியா ராகம்-2024" இன் 4வது சுற்று சிறப்பாக நடைபெற்றது. "விலா கருணா" என்னும் மூத்தோர் நலன் காக்கும் நிலைய" ஸ்தாபகரும் அதிபருமான திருமதி இந்திராணி நாகேந்திரம் அவர்களின் ஏற்பாட்டில் இந்த போட்டி நிகழ்ச்சி 6வது ஆண்டாக நடைபெற்றுவருகின்றது.
மார்க்கம் நகரில் நடைபெற்ற இந்த 4வது சுற்று நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான ஆர். என். லோகேந்திரலிங்கம் தனது பாரியார் சகிதம் அழைக்கப்பெற்றிருந்தார்.
(உள்ளே செய்தி 12ம் பக்கத்தில்)



தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker